பக்கங்கள் 30

காலை முரசு

## இந்தியத் தூதுவருடன் நாமல் எம்.பி. சந்திப்பு

இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜாவுக்கும் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் சந்திப்பு இடம்பெற்றது.

03

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 29 ஞாயிற்றுக்கிழமை 11.05.2025 | அதிர்வு 280



# 35 சபைகளிலும் தமிழரசு தலைமைக்கு முயற்சிக்கும்

## நேற்று அரசியல் குழுவில் முடிவு

தமிழர் தாயகத்தில் 35 க்கும் குறையாத உள்ளூராட்சி சபைகளில் இலங்கைத் தமிழரசுக் கட்சி முன்னிலை பெற்றுள்ளது. அந்தச் சபைகளில் எல்லாம் மேயர், நகர பிதா, தவிசாளர் பதவிகளைப் பெறுவதற்கு தமிழரசுக் கட்சி முழு மூச்சாக முயற்சிக்கும்.

நேற்றுப் பிற்பகல் வவுனியாவில் நடைபெற்ற கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் இவ்வாறான முடிவு எட்டப்பட்டது எனத் தெரியவந்தது.

03

# மாகாண சபைத் தேர்தலையும் அரசு உடனே நடத்த வேண்டும்

## ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி வலியுறுத்து



மாகாண சபைத் தேர்தலையும் விரைவில் நடத்துமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உப தலைவர் மஹிந்த அமரவீர, அரசிடம் வலியுறுத்தினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கதிரைச் சின்னத்துக்கு வரவேற்பு கிடைத்துள்ளது எனவும், மாகாண சபைத் தேர்தலின்போது சிறப்பான வெற்றி கிடைக்கும் எனவும் அவர் கூறினார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் எதிரணிகள் செயற்பட வேண்டும் எனவும் முன்னாள் அமைச்சர் மஹிந்த அமரவீர மேலும் தெரிவித்தார்.




இப்போது தமிழ்த் தேசிய அரசியலில் சர்ச்சைக்குரிய விவகாரமாக மாறி இருப்பது தேர்தல் வெற்றிக்காக வன்னியில் இலங்கைத் தமிழரசுக் கட்சி கசிப்பு விநியோகித்தது, பணம் பட்டுவாடா செய்தது என்ற அமைச்சர் பிமல் ரட்நாயக்கா நாடாளுமன்றத்தில் இட்டுக்கட்டி முன்வைத்த குற்றச்சாட்டுத்தான்.

வடக்கில் கணிசமான வெற்றியை கடந்த நாடாளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கா பெற்றுக் கொடுத்திருந்த போது, அதை ஆறு மாதத்துக்குள் போட்டடித்துக் குழப்பிய சில பிரகிருதிகள், அதற்கான குற்றச்சாட்டுப் பொறுப்பு தங்கள் மீது விழாமல் தவிர்ப்பதற்காகச் சோடித்த கயிறு தான் இந்தக் கசிப்பு விநியோகம், பணம் பட்டுவாடா என்ற கற்பனைக் கதை –

03

# ஜனாதிபதியின் பங்கேற்புடன் அரச வெசாக் விழா ஆரம்பம்














2569 ஸ்ரீபுத்த வருடத்தின் அரச வெசாக் விழா, மூன்று நிகாயாக்களின் தேரர்கள் மற்றும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பங்கேற்புடன் நேற்று சனிக்கிழமை நுவரெலியா சர்வதேச பௌத்த நிலைய விகாரையில் ஆரம்பிக்கப்பட்டது.

"பஜெத மித்தே கல்யாண – பஜெத புரிசுத்தமெ" (நற்குணங்கள் கொண்ட உன்னத நண்பர்களுடன் பழகுவோம்) எனும் தொனிப்பொருளின் நடைபெறும் இம்முறை அரச வெசாக் விழா, மே மாதம் 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை நுவரெலியா மாவட்டத்தை மையமாகக் கொண்டு நடைபெறும்.

மகாநாயக்க தேரர்கள், அகில இலங்கை சாசனாரக்ஷக சபையின் அறிவுறுத்தல்களின்படி, ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம், புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, பௌத்த அலுவல்கள் திணைக்களம், மத்திய மாகாண சபை மற்றும் நுவரெலியா மாவட்ட செயலகம் ஆகியவை இணைந்து அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்துள்ளன.

மேலும், மே 10 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரை வெசாக் வாரமாகப் பிரகடனப்படுத்தி, அரசின் கொள்கைத் திட்டத்திற்கு ஏற்ப மக்களின் ஆன்மீக வளர்ச்சியை மேம்படுத்துவதற்காக பல்வேறு பௌத்த நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இந்தக் காலப்பகுதியில், நுவரெலியா மாவட்டத்தில் தற்போது முடிக்கப்படாத விகாரைகளின் அபிவிருத்திப் பணிகளை முப்படைகளின் உதவியுடன் நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேபோல், அரச வெசாக் விழாவுடன் இணைந்து, மக்களிடையே ஆன்மீக வளர்ச்சியையும் பௌத்த மத விழிப்புணர்வையும் வளர்க்கும் வகையில் "கிளீன் ஸ்ரீலங்கா" வேலைத் திட்டத்தின் மூலம் பல விசேட நிகழ்ச்சிகள் செயற்படுத்தப்பட்டுள்ளன.

பன்முக மத மற்றும் பன்முக கலாசார சமூகத்தைக் கொண்ட நுவரெலியா மாவட்டத்தில் இந்த ஆண்டு அரச வெசாக் விழாவை ஏற்பாடு செய்வது சிறப்பு நிகழ்வாக உள்ளதோடு, நாடு முழுவதும் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்குவதும், உலகெங்கிலும் உள்ள பௌத்த நாடுகளுடனான உறவுகளை மேலும் வலுப்படுத்துவதும் இதன் நோக்கமாகும்.

2025 புத்த வருட அரச வெசாக் விழாவைக் குறிக்கும் வகையில் நினைவு முத்திரையும் இங்கு வெளியிடப்பட்டதுடன், அதன் முதல் நினைவு முத்திரை ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

மேலும், 2025 ஆம் ஆண்டு அரச வெசாக் விழாவுக்கு இணையாக, கொத்மலை மலியதேவ ரஜமஹா விஹாரையை புனித பூமியாக அறிவிக்கும் ஸ்ரீ சன்னஸ் பத்திரத்தை வழங்குதல் மற்றும் குருநாகல் ஸ்ரீ விஷ்ணு தேவாலயத்தை புனித பூமியாக அறிவிக்கும் ஸ்ரீசன்னஸ் பத்திரத்தையும் ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சி

**இரகசியம் பரகசியம்...**

அபவாதக் குற்றச்சாட்டு – என்பது எல்லோருக்கும் தெரியும்.

ஆயினும், இந்தக் குற்றச்சாட்டை அமைச்சர் பிமல் ரட்நாயக்கா வெளியிட்ட போது அதற்கு பதிலளித்த இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ சுமந்திரன், இந்த விடயங்களை நாடாளுமன்றத்தில், நாடாளுமன்ற சிறப்பு உரிமை என்ற திரைக்குப் பின்னால் ஒளித்து இருந்து கொண்டு முன் வைக்காமல், பொதுவெளிக்கு வந்து ஆதாரங்களுடன் பகிரங்கமாக முன்வையுங்கள் என்று அமைச்சருக்கு சவால் விட்டார்.

அந்தச் சவாலில் ஒரு விடயம் ஆழப் பொதிந்திருந்தமையை அமைச்சர் சந்திரசேகரன் உணர்ந்து கொள்ளவில்லைப் போலும். அதற்கான சட்ட – பொது அறிவு அவருக்கு இல்லையோ தெரியவில்லை.

அமைச்சர் பிமல் ரட்நாயக்கா செய்யத் தவறிய அந்த வேலையை, இப்போது சந்திரசேகரன் நாடாளுமன்றுக்கு வெளியே வந்து ஊடகம் ஒன்றுக்கு காணொளிப் பேட்டியாக அதே விடயத்தை வெளிப்படையாகத் தெரிவித்துச் செய்திருக்கிறார். பொறுப்போடு இந்த குற்றச்சாட்டைத் தான் முன் வைக்கின்றார் என அவர் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் கட்சி ஒன்றின் மீது இன்னொன்று வழமையாகச் சேறு வாரிப் பூசும் நடவடிக்கையில் இதுவும் ஒன்று என்ற கணக்கில் விடயம் முடிந்து விடும் என்று கருதித்தான் இந்த விவகாரத்தை அவர் வாய்ச் சவடாலாக அந்தப் பேட்டியில் தெரிவித்திருப்பார் என நினைக்கிறேன்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சட்டத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஓர் ஆள் அல்ல. ஆயினும் ஒரு தொகுதி மக்களை அல்லது பிரதிநிதிகளை தெளிவாகச் சுட்டும் ஒரு குழுமம். அந்தக் குழுமத்தில் இருப்பவர்களுக்கு எதிரான இத்தகைய குற்றச்சாட்டுகள், அவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தத் தக்கவை என்ற அடிப்படையில் இந்தக் குற்றச்சாட்டுக்கு எதிராகக் கடுமையான வழக்கு ஒன்றை – மானநஷ்ட வழக்கு ஒன்றை – தாக்கல் செய்வதற்கான சட்ட வாய்ப்புகள் அதிகம் உண்டு. அமைச்சர் சந்திரசேகரன் இவ்விடத்தில் சுரண்டி இருப்பது ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியை.

இந்த விடயத்தில் தொடர்ந்து சட்டத்துறை சார்ந்த பரபரப்பு செய்திகளை வெளியிடக்கூடிய வாய்ப்பு விரைவில் எங்களுக்குக் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

அமைச்சர் சந்திரசேகரனும் தோதாதாக ஒரு ஜனாதிபதி சட்டத்தரணியை இப்போதே ஒழுங்குப்படுத்தி வைத்துக் கொள்வது நல்லது. தேர்தல் சமயத்தில் தமிழரசு சார்பில் கசிப்பு மற்றும் பணம் பட்டுவாடாச் செய்தவர்கள்., அவற்றை வாங்கியவர்கள் என சாட்சிகளையும் அவர் முன்வைக்க வேண்டியிருக்கும்.

******

மட்டக்களப்பு மாநகர சபையின் மேயர் வேட்பாளராக இலங்கைத் தமிழரசு கட்சி சார்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவம் பாக்கியநாதனும், உதவி மேயராக வைரமுத்து தினேஷும் நிறுத்தப்படுவார்கள் எனத் தெரிகிறது.

போரதீவுப்பற்று பிரதேச சபைக்குத் தவிசாளராக மதி மேனனும், பிரதித் தவிசாளராக கயல்சீலனும், மண்முனை தென் எருவில்பற்று தவிசாளராக ம.வினோராஜும், பிரதித் தவிசாளராக வசீகரனும், மண் முனை மேற்கு (வவுணதீவு) பிரதேச சபையின் தவிசாளராக கோபாலபிள்ளையும், பிரதித் தவிசாளராக டிஷாந்தும் தமிழரசு கட்சியினால் நிறுத்தப்படுவார்கள் என மட்டக்களப்புச் செய்திகள் தெரிவித்தன.

மண்முனைப் பற்று (ஆரையம்பதி) பிரதேச சபை, மண்முனை தென் மேற்கு (பட்டிப்பளை) பிரதேச சபை, ஏறாவூர்ப்பற்று பிரதேச சபை ஆகிய வற்றுக்கு தவிசாளர், பிரதி தவிசாளர் பதவிகளுக்கு உரியவர்கள் தேர்வு செய்யப்பட்டுள்ள போதிலும், ஏனைய தமிழ் கட்சிகளுடன் நடைபெறும் பேச்சுக்களின் பின்னர் அவை உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என்றும் தெரிய வருகின்றது.

---

**35 சபைகளிலும்...**

கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானத்தின் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரசியல் குழுவின் உறுப்பினர்களான பதில் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், எக்ஸ். குலநாயகம், எஸ்.குகதாசன் எம்.பி., ப.சத்தியலிங்கம் எம்.பி., இரா.சாணக்கியன் எம்.பி., சி.சிறீதரன் எம்.பி., த.கலையரசன் ஆகியோர் பங்குபற்றினர். அரசியல் குழுவின் மற்றொரு உறுப்பினரான கி. துரைராஜசிங்கம் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றவில்லை.

இலங்கைத் தமிழரசுக் கட்சி நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் 35 க்கும் குறையாக சபைகளில் முன்னிலை பெற்றுள்ளது. அத்தகைய முன்னிலை பெற்ற ஒவ்வொரு சபையிலும் தலைமைப் பதவியைப் பெறுவதற்கு கட்சி முயற்சிக்க வேண்டும் என்றும், இது தொடர்பில் ஏனைய தமிழ் பேசும் கட்சிகளோடு ஆதரவு கேட்டு தொடர்பாடல் மேற்கொள்ள வேண்டும் என்றும் நேற்றைய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குறிப்பாக கிழக்கில் தமிழ் பேசும் கட்சிகள் என்ற முறையில் முஸ்லிம்களின் கட்சிகளோடும் ஆதரவு கேட்டு பேச்சு நடத்துவது குறித்தும் நேற்றைய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது எனவும் அறியவந்தது.

---



**இந்தியத் தூதுவருடன்...**

இந்தச் சந்திப்பு நேற்று சனிக்கிழமை நடைபெற்றது. மேற்படி சந்திப்பின்போது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான கூட்டாண்மையின் புதுப்பிப்புகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன.




### யாழ்ப்பாணத்தில் இருந்து

# கொழும்பு சென்ற அதி சொகுசு பஸ் லொறியுடன் மோதி கோர விபத்து!

## பலர் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதி

(க.மகாதேவன்)

அநுராதபுரம் வீதி – சாலியவெவ 18ஆம் இலக்க மைல் கல் பிரதேசத்தில் இடம்பெற்ற வாகன விபத்தில் பலர் காயமடைந்துள்ளனர் என்று சாலிய வெவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 2.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு சென்ற அதி சொகுசு பஸ் ஒன்றும், எதிர்த் திசையில் வந்த லொறி ஒன்றும் மோதி இந்தப் பாரிய விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் சாரதி மற்றும் நடத்துனர் உள்ளிட்ட பலர் காயமடைந்த நிலையில் சிலாபம் மற்றும் புத்தளம் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர் என்றும் பொலிஸார் மேலும் குறிப்பிட்டனர்.

மேலதிக விசாரணைகளைச் சாலிய வெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.







# JollyBash தொடர் இன்று ஆரம்பம்: JOLLY RUSTY BOYS ஐ எதிர்கொள்கிறது நடப்புச்சம்பியன் JOLLY KINGS அணி!

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகத்தின் ஒழுங்குபடுத்தலில் யாழ். இந்துவின் மாணவர்கள், பழைய மாணவர்களை ஏலம் மூலம் அணிகளாக பிரித்து நடத்தப்படும் கூடைப்பந்தாட்ட சுற்றுப்போட்டி, இன்று மாலை 5 மணியளவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் ஆரம்பமாகவுள்ளது.

கடந்த வருடம் நடைபெற்ற ஜொலி பாஸ் (JollyBash) கூடைப்பந்தாட்ட முதலாவது தொடரை மஞ்சுதன் தலைமையிலான ஜொலி கிங்ஸ் (Jolly Kings) அணி கைப்பற்றி சம்பியனாகியிருந்தது.

இந்த வருடமும் வெற்றிக்கிண்ணத்தை கைப்பற்றும் நம்பிக்கையோடு மஞ்சுதன் தலைமையில் நிசனன், அனுசன், சர்மிலன், கஜீபன், சங்கீர்த்தன், ஹறி, நிசாந்தன், திவ்வியப்பிரியன், துவார்சன், ராஜா, கபிலன், சரனியன், சீரோன், ஆதிரன் ஆகியோரை உள்ளடக்கிய பலமான அணியாக களமிறங்குகிறது.

இன்று மாலை தனது முதலாவது போட்டியில் ஜொலி ரஸ்ரி போய்ஸ் (JOLLY RUSTY BOYS) அணியை எதிர்த்தாடவுள்ளது.



# வெலிமடையில் பஸ் விபத்து: ஒருவர் பலி, 20 பேர் காயம்

வெலிமடை, டயரபா பகுதியில் நேற்று இரவு தனியார் பஸ்ஸொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் காயமடைந்த 20 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டாரவளையில் இருந்து வெலிமடை நோக்கிப் பயணித்த தனியார் பஸ்ஸொன்றே இவ்வாறு விபத்திற்குள்ளாகியுள்ளது.



# கொழும்பில் இரு கட்டடங்களில் தீ விபத்து

கொழும்பு - வொக்ஷோல் வீதியில் உள்ள இரண்டு கட்டடங்களில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்து நேற்று சனிக்கிழமை ஏற்பட்டது.

தீப்பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் 5 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டன.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# ஆமர் வீதி கடையிலும் தீ விபத்து

கொழும்பு – ஆமர் வீதியில் உள்ள கடை ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது.

இந்தத் தீ விபத்து நேற்று சனிக்கிழமை ஏற்பட்டது.

தீப்பரவலைக் கட்டுப்படுத்தும் பணிகளில் 2 தீயணைப்பு வாகனங்கள் ஈடுபட்டன. தீ விபத்துக்கான காரணம் இதுவரைகண்டறியப்படவில்லைஎன்றுபொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# என்ன உடன்படிக்கை?

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தல்களில் தமிழர் தாயக மக்கள் - தமிழ் மக்கள் - தமிழ்த் தேசியத்தைப் பேணிப் பாதுகாக்கும் விதத்தில் மிகுந்த பொறுப்புணர்வோடு வாக்களித்திருக்கின்றார்கள்.

அதனால் இவ்விடயத்தை ஒட்டி மிகுந்த பொறுப்புணர்வோடு செயல்பட வேண்டிய கடப்பாடு - கட்டாயம் - தமிழ்க் கட்சிகளின் தலைவர்களுக்கு வந்திருக்கின்றது. இப்படி ஒரு நெருக்குதல் - இக்கட்டு - தங்களுக்கு வந்திருப்பதைப் புரிந்து கொண்டு கட்சித் தலைவர்கள் அறிக்கைகள், கருத்துக்கள் வெளியிடுகின்றமை தெளிவாகத் தென்படுகின்றது.

“தமிழரசுக் கட்சி எங்களோடு இணைந்து ஏதேனும் பிரதேசத்தில் ஆட்சி அமைப்பதாக இருந்தால் கொள்கை ரீதியான உடன்படிக்கை மூலமே அது சாத்தியப்படும்” - என்று தமது முகத்தை வெளிப்படுத்தி இருக்கின்றார் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம்.

தமிழரசுக் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டவர்களும், சங்கு கூட்டிலிருந்து விலக்கப்பட்டவர்களும், அதேபோன்று வேறு சிலரும் தேர்தல் சமயத்தில் கஜேந்திரகுமார் தரப்புடன் அணி சேர்ந்து நின்றார்கள். நிற்கின்றார்கள். இப்போது தமிழரசுக் கட்சியுடன் இணைந்து ஆட்சி அமைப்பதற்கு கொள்கை ரீதியான உடன்படிக்கையைக் கோரும் கஜேந்திரகுமார், இப்படி தேர்தல் சமயத்தில் தம்மோடு சேர்த்துக் கொண்டவர்களை எல்லாம் இவ்வாறு கொள்கை ரீதியான உடன்படிக்கையோடுதான் இணைத்துக் கொண்டார் என்று கருதுவோம்.

சரி. தமிழரசோடு இணைந்து செயல்படுவதற்காக என்ன கொள்கை ரீதியான உடன்படிக்கையை அவர் எதிர்பார்க்கிறார் என்பதுதான் கேள்வி.

காலம் காலமாக தமிழரசு சமஷ்டித் தீர்வை வலியுறுத்திய போது அவரது பாட்டனார், அவர் இப்போது இருக்கும் அதே கட்சித் தலைவர் பதவியில் இருந்து கொண்டு, அதை “சம்மட்டித் தீர்வு” என்றார். இப்போது அந்த சமஷ்டித் தீர்வை தொடர்ந்து வலியுறுத்தி அதற்குப் போராடுகின்ற தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரனை பார்த்து “தந்தை செல்வாவின் பாதையில் சமஷ்டியை ஏற்று செயல்பட வேண்டும்” என்று பாடம் போதிக்கிறார் கஜேந்திரகுமார். வேடிக்கையான விடயம்.

சரி, தமிழரசு அவரோடு கொள்கை ரீதியில உடன்படுவது என்றால் எந்த கொள்கையில்? “இரு தேசம், ஒரு நாடு” என்ற கொள்கையிலா? அல்லது “ஏக்கிய ராஜ்ய” என்ற சிங்களச் சொல்லின் தமிழாக்கம் “ஒருமித்த நாடு” என்று அரசமைப்பு வரைவிலேயே மிகத் தெளிவாக இருக்கையில் அதை “ஒற்றை ஆட்சி” என்று விதண்டாவாதம் பண்ணும் கஜேந்திரகுமாரின் கொள்கையின் அடிப்படையில் உடன்பாடு காண்பதா?

நீண்ட காலமாக தாங்கள் மட்டுமே தமிழ்த் தேசியத்தின் தூய காவலர்கள் - 24 கரட் சொக்கத் தங்கம் - என்று கருதி, கூறி, செயல்பட்டு வந்த கஜேந்திரகுமார் அணி அந்தச் சமயத்தில் தாங்கள் பித்தளை, செம்பு, கலவை என்று விமர்சித்த பல பிரகிருதிகளை இப்போது சொக்கத்தங்கமாக ஏற்று தங்களுடன் இணைத்துக்கொண்டிருப்பது போன்ற உடன்பாட்டை தமிழரசுடன் அவர் செய்ய எதிர்பார்க்கின்றாரா?

ஐக்கியம் முக்கியம். ஒற்றுமை உயர்வு தரும். இன்றைய கட்டத்தில் அது தேவை. ஆனால் அவை அரசியலுக்கான நடிப்பாக இல்லாமல், உண்மையான தகுதி உள்ளவர்களை மதிக்கின்ற நேர்மையான எண்ண வெளிப்பாடாக இருக்க வேண்டும்.

கஜேந்திரகுமார் அணி சேர்க்கும் தரப்புக்களை பார்க்கும்போது ஐக்கியத்திற்கான ஆக்கபூர்வ நிலைப்பாடு அவர் தரப்பில் இருப்பதாக தெரியவில்லை. அதுதான் உண்மை.



# கொழும்பில் 23 இடங்களில் விசேட தோரணைகள்

விசாக பூரணை தினத்தை முன்னிட்டு கொழும்பின், 23 இடங்களில் விசேட தோரணைகள் அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒருகொடவத்தை, தொட்டலங்க, தெமட்டகொட, பொரளை, பேலியகொடை, கிரிபத்கொடை, கொட்டாவ, மஹரகம, பிலியந்தல, பெல்லங்வில ஆகிய பகுதிகளில் விசேட தோரணைகள் அமைக்கப்பட்டுள் என என குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன் மொரட்டுவை, தெஹிவளை, மாலபே மற்றும் அதுருகிரிய உள்ளிட்ட பகுதிகளிலும் விசேட தோரணைகள் நிர்மாணிக்கப்பட்டுள் என.

இந்தநிலையில், கொழும்பு பௌத்தாலோக்க மாவத்தை, லேக் ஹவுஸ் வீதி, கொழும்பு மாநகர சபை வீதி மற்றும் ஹுணுப்பிட்டிய கங்காராமை வீதி ஆகிய பகுதிகளிலும் விசேட விசாக பூரணை வலயங்கள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.



# வெற்றிலை ஏற்றுமதி பாதிப்பு

இந்தியா – பாகிஸ்தானுக்கு இடையிலான பதற்றமான சூழ்நிலை காரணமாக வெற்றிலை ஏற்றுமதி பாதிக்கப்பட்டுள்ளதாக இலங்கை வெற்றிலை ஏற்றுமதியாளர்கள் தெரிவிக்கின்றனர்.


விமான சேவை நிறுத்தப்பட்டுள்ளமையால் கராச்சிக்கான வெற்றிலை ஏற்றுமதி நிறுத்தப்பட்டுள்ளதாக குளியாப்பிட்டிய, எப்பலதெனிய வெற்றிலை விவசாய நல சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையிலிருந்து பாகிஸ்தானுக்கு அதிகளவான வெற்றிலை ஏற்றுமதி இடம்பெறுகிறது.

வாரத்தில் இரு நாட்களுக்கு விவசாயிகளிடமிருந்து வர்த்தகர்கள் வெற்றிலையைக் கொள்வனவு செய்கின்றனர்.

எனினும், விமான சேவை நிறுத்தப்பட்டமையினால் வெற்றிலைகள் விமான நிலையத்தில் தேங்கியுள்ளதாகவும் எப்பலதெனிய வெற்றிலை விவசாய நல சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

வர்த்தகர்கள் வெற்றிலைகளைக் கொள்வனவு செய்யாமையினால் உள்நாட்டுச் சந்தைக்கு வரும் வெற்றிலையின் அளவு அதிகரிக்கும் எனவும் எதிர்காலத்தில் வெற்றிலையின் விலை குறைவடையும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.



# சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் குறித்து பாடசாலை நிர்வாகிகளுக்கு அறிவுறுத்தல்

கடந்த ஏப்ரல் 29 ஆம் திகதி கொட்டாஞ்சேனையில் சிறுமியொருவர் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கபட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கொட்டாஞ்சேனை மற்றும் பம்பலப்பிட்டி பொலிஸ் நிலையங்களில் இருந்து சம்பவம் தொடர்பான அறிக்கைகள் கோரப்பட்டுள்ளதாக தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தலைவர் மேல் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி இனோகா ரணசிங்க தெரிவித்தார்.

பாடசாலைகளின் நற்பெயரைப் பாதுகாப்பது உள்ளிட்ட காரணங்களுக்காக பாடசாலைகளில் மாணவர்களுக்கு உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் பாலியல் ரீதியாகவும் இடம்பெறும் துன்புறுத்தல்கள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படாமலிருப்பது கண்டறியப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலைமைகளைக் குறைப்பதற்காக துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளில் எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கல்வி அமைச்சின் செயலாளர் மற்றும் அனைத்து மாகாண கல்விப் பணிப்பாளர்களுக்கும் தெளிவுபடுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக மேல் நீதிமன்ற நீதிபதி பிரீத்தி இனோகா ரணசிங்க தெரிவித்தார்.

பாடசாலைகளுக்குள் ஏதேனும் துஷ்பிரயோகம் இடம்பெற்றால் அதிபர் அல்லது பொறுப்பான தரப்பினரால் உடனடியாக 1929 என்ற சிறுவர் பாதுகாப்பு சேவை மூலமாகவோ அல்லது இலக்கம் 330, தலவத்துகொட வீதி, மாதிவெல, ஸ்ரீ ஜெயவர்தனபுர என்ற முகவரியில் உள்ள தேசிய சிறுவர்கள் பாதுகாப்பு அதிகாரசபையிலோ முறைப்பாடு செய்ய வேண்டுமென அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# அரச அனர்த்த நிவாரண கடன் தொகை அதிகரிப்பு



அரச ஊழியர்களுக்கான அனர்த்த நிவாரண கடன் தொகை அதிகரிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் வெளியிட்டுள்ள சுற்று நிருபத்தில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய 250,000 ரூபாவாக இருந்த அரச ஊழியர்களின் அனர்த்த நிவாரண கடன் தொகை 4 இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

கடந்த வரவு செலவு திட்டத்திற்கமைய அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிப்பதுடன் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக பொது நிர்வாகம் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அறிவித்துள்ளது.

# சைவ சொற்பொழிவும் சமய அறிவுப் போட்டியும்

சங்கானை சிலம்புப் புளியடி ஞான வைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவத்தில் நாளை திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு ஆலய பிரதான மண்டபத்தில் பண்டிதர் செஞ்சொல்வேந்தர் சைவப்புலவர் செ.த. குமரன் "பிரமன் சிரம்கொய்த பைரவர்" என்னும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து வினாக்கள் தொடுக்கப்பட்டு சைவசமய அறிவுப் போட்டியில் பரிசில் வழங்கப்படவுள்ளது.

# 33,000 இற்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை

இந்த மாதத்தின் முதல் வாரத்தில் 33,910 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தியா, பிரித்தானியா, சீனா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, பங்களாதேஷ் மற்றும் ரஷ்யாவிலிருந்து அதிகளவான பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டு இதுவரையான காலப் பகுதியில் 930,794 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வந்துள்ளனர்.



# உலகை உய்விப்பதற்காக வந்த பெருங்கோட்பாடே சூழலியம்!

## மாணவர்கள் மத்தியில் ஐங்கரநேசன் விளக்கம்





கம்யூனிசம், சோசலிசம், பெரியாரிசம் என்று காலத்துக்குக் காலம் மனுக்குலத்தை வழிநடத்தவெனக் கோட்பாடுகள் உருவாகி வந்துள்ளன. தற்போது மானுடத்தையும் தாண்டி ஒட்டுமொத்த உலகையுமே உய்விக்க வந்த பெருங்கோட்பாடாகச் சூழலியம் உருவெடுத்துள்ளது. மாணவர்கள் சுற்றுச்சூழலை சூழலியற் கல்வியின் ஊடாக மாத்திரம் அணுகாமல் சூழலியம் என்ற சித்தாந்தத்தின் ஊடாகவும் அணுக முன்வரவேண்டும். அதுவே உலகளாவிய ரீதியில் நாம் இன்று எதிர்கொண்டுள்ள பல்வேறு சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்குமான தீர்வுகளைத் தரும் என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் க.பொ.த உயர்தரம் 2027 பிரிவு பயிலுகின்ற மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் செயலமர்வு நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. இதில் வளவாளராகக் கலந்துகொண்டு உரையாற்றியபோதே பொ. ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் –

சூழலியற் கல்வி சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும். சூழல் விழிப்புணர்வு சூழல் பாதுகாப்பில் எங்களைப் பங்குபற்றுநர்களாக்க வைக்கும். ஆனால், எமது கல்வி முறைமை பூமியையோ, சுற்றுச் சூழலையே அதன் முழுப் பரிமாணங்களோடும் புரிந்துகொள்வதற்கான வாய்ப்புகளைத் தரவில்லை. நாம் பாடங்களைக் கலைப்பிரிவு, வர்த்தகப் பிரிவு, விஞ்ஞானப்பிரிவு என்றும் புவியியல், உயிரியல், இரசாயனவியல், பௌதிகவியல் என்றும் வரையறுத்தே கற்கிறோம். இந்தப் பாட எல்லைகளைக் கடந்து சிந்திக்க இயலாததால் யாவற்றையும் ஒருங்கிணைத்து நோக்கும் பூரண அணுகுமுறை எங்களிடம் இல்லாமற்போய்விட்டது. இதனால், அந்தகர்கள் யானையைப் பார்ப்பது போன்றே, நாம் ஒவ்வொருவரும் நமது துறைசார் கல்வி அறிவின் ஊடாக மட்டுமே பூமியை மதிப்பீடு செய்து வருகிறோம்.

அறிவியல் என்பது மனுக்குலத்தின் மேம்பாட்டுக்கானவற்றைக் கண்டறிவதற்கென உருவான துறை. ஆனால், அதுவே இன்று இயற்கையைப் பணிவிக்க முயலும், சகல வளங்களையும் அடியோடு அனுபவிக்கத் துடிக்கும் சூழல் விரோத சிந்தனைப் போக்காக உருவெடுத்துள்ளது. ஏனைய உயிரினங்களோடு மனிதனும் ஓர் உயிரினம் என்பதை மறுத்து, மனிதனே மையம் என்ற சிந்தனையே சூழல் மீதான ஆக்கிரப்புகளாக வெளிப்படுகின்றது. மனிதனின் ஆக்கிரமிப்புகளுக்கு எதிராகப் பூமியும் அவ்வப்போது தனது எதிர்ப்புகளைக் காட்டி வருகிறது. காலம் தப்பிய அடைமழை, வெள்ளப் பெருக்கு, கடும் வரட்சி, பெரும் புயல், நிலச்சரிவு போன்ற இயற்கைச் சீற்றங்கள் எல்லாம் மனிதர்களின் அடக்கு முறைகளுக்கு எதிரான பூமியின் எதிர்ப்பு நடவடிக்கைகள்தான்.

சூழலியற் கல்வி சுற்றுச்சூழல் பிரச்சினைகளுக்கான தீர்வைக் கண்டடையப் போதுமானதல்ல என்பதாலேயே பூமியை ஒரு தனித்த பேருயிரியாகக் காணுகின்ற கயா கோட்பாடு, பூமியை எங்கள் ஆக்கிரமிப்புகளில் இருந்து விடுதலை செய்வதன் மூலம் பூமியின் எதிர்த்தாக்குதல்களில் இருந்து எங்களை விடுதலை செய்யும் விடுதலைச் சூழலியல் கோட்பாடு என்பன சமீப காலமாக மேலெழுந்து வருகின்றன. இக்கோட்பாடுகள் தமிழர்களுக்குப் புதியவை அல்ல. பாரதியாரின் காக்கை, குருவி எங்கள் ஜாதி, காடும் மலையும் எங்கள் கூட்டம் என்ற பாடலில் பிற உயிரினங்களில் மட்டும் அல்லாது கல்லிலும் மண்ணிலும் எங்களைக் காணுகின்ற சூழல்நேயச் சிந்தனை வெளிப்பட்டிருக்கின்றது. இந்தச் சிந்தனை மரபே அனைத்துச் சூழற் பிரச்சினைகளுக்குமான தீர்வாக அமையும். – என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.




# தமிழ்த் தேசியத்தை வலியுறுத்தும் ஆட்சியை தமிழ் கட்சிகள் சேர்ந்து நிர்வகிக்க வேண்டும்

## வலியுறுத்துகின்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்

தமிழர் நிலத்தை தமிழரே ஆட்சி செய்ய வேண்டும் என்று தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் ஆட்சியை அனைத்துத் தமிழ் கட்சிகளும் இணைந்து நிர்வகிக்க வேண்டும் என்ற தீர்ப்பையே தமிழ் மக்கள் உள்ளூர் அதிகார சபை தேர்தலின் மூலம் வழங்கியுள்ளனர்.

அதற்கமைய வடகிழக்கில் தமிழ் கட்சிகளின் ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் முதலில் இந்த தரப்புக்கள் பேச வேண்டுமென முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்பாணத்தில் நேற்று ஊடக சந்திப்பொன்றை முன்னெடுத்து இவ்வாறு கூறிய அவர் மேலும் கூறுகையில் –

மக்கள் வழங்கிய தீர்ப்பின்படி ஆட்சி அதிகாரத்தை தமிழ் கட்சிகள் ஒற்றுமையாகஓரணியில்இணைந்துசெயற்படுத்துவது அவசியம்.

இதேநேரம் தமிழரசுக் கட்சி அதிக ஆசனங்களை எடுத்துக் கொண்டாலும் ஆட்சி அமைப்பதற்கான பெரும்பான்மை அவர்களுக்கு இருக்கவில்லை.

இதனால் தமிழ் மக்களின் நலன் கருதி ஏனைய தரப்பினருக்கும் விட்டுக்கொடுப்புகளுடன் செயற்பட தமிழ் தரப்புகள் தயாராக வேண்டும்.

இதுவே மக்களின் எதிர்பார்ப்பாகவும் இருக்கின்றது.

இதேநேரம் தற்போது பெரிய, சிறிய என்ற நிலையில் எந்தவொரு கட்சியும் இல்லை.

அனைத்தும் சமமான நிலைப்பாட்டிலேயே இருக்கின்றன.

தவறுகள் இனிமேல் இழைக்கப்பட கூடாது. ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி போன்ற கட்சிகள் தேசியத்தை வைத்தே தேர்தலை எதிர்கொண்டன. இந்த கட்சிகள் அதிகபடியான ஆசனங்களை பெற்று இருக்கின்றன.

இலங்கை தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 307 ஆசனங்களையும், ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி 106 ஆசனங்களையும், தமிழ் தேசிய மக்கள் முன்னணி 80 ஆசனங்களையும் பெற்றுள்ளன. எனவே ஏறத்தாழ 500 ஆசனங்களை கூட்டாக பெற்றுள்ளனர்.

மக்களிடம் வைத்தகோரிக்கை மக்கள் ஏற்றுக்கொண்டு ஒவ்வொரு கட்சிக்கும் அதிகப்படியான ஆசனங்களை வழங்கியிருக்கின்றனர்.

மக்கள் கொடுத்த ஆணைக்கு ஏற்ப இலங்கை தமிழரசுக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி,அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் ஆகிய கட்சியினர் கூட்டாகப் பேசி ஆட்சி அதிகாரங்களை தமிழ் மக்கள் நிர்வாகத் திறனைகளை ஒன்றுபட்டு செயற்படுத்தவேண்டும் என்பது எமது நிலைப்பாடு.

மாகாண சபையினை நடத்தமுடியாதவர்கள், நிதியைத் திருப்பி அனுப்பியவர்கள். நிர்வாகத்தைச் செயற்படுத்த முடியாதவர்கள் எனப் பல்வேறுபட்ட எதிர்ப் பிரசாரங்கள் பல்வேறு தமிழ் தரப்பினர்களிடம் இருக்கின்றன.

தேசிய மக்கள் சக்தி வடக்கு,கிழக்கு மாகாணத்தில் ஆட்சி அமைக்கமுடியாத சூழ் நிலையில்தான் உள்ளனர்.

எனவே தமிழ் மக்களின் அதிகாரம், எதிர்காலம், உரிமைகள் என்பவற்றை புறம்தள்ளி நடக்கக்கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளனர்.

மக்கள் ஆசனங்களை அனைவருக்கும் பகிர்ந்தளித்துள்ளனர். பேச்சு வார்த்தைகள் சரியாக நடைபெறுமாக இருந்தால் ஓர் அணியில் நின்று ஆட்சி அதிகாரங்களில் பகிர்ந்து கொள்வதில் சிக்கல் இருக்காது, சிறப்பாக அமையும். – என்றார்.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர்.

இலங்கையில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்ட சரித்திரத்தின் ஆரம்பத்தில் - எண்பதுகள் வரை - தாயகத்தில் நின்று நம் இனத்துக்காகப் போராடிய புலமையாளர். விடுதலைப் போராட்டத்தின் ஆரம்பக் கட்டத்தில் தியாகி சிவகுமாரன், புலிகளின் தலைவர் பிரபாகரன் மற்றும் உமாமகேஸ்வரன், சுந்தரம் சிறிசபாரத்தினம், சித்தார்த்தன் முதல் டக்ளஸ் தேவானந்தா வரை மூத்த போராளித் தலைவர்கள் எல்லோரோடும் சட்டவாளராகவும், தமிழ் மக்களின் புனர்வாழ்வுப் பணிகளை ஒருங்கிணைக்கும் தொடர்பாளராகவும் நெருங்கிப் பழகியவர். தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் தமிழர் தகவல் நிலையம் ஆகியவற்றின் பிதாமகர்களில் ஒருவர். இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட கொடுரங்கள் குறித்து விசாரிக்க நியமிக்கப்பட்ட சன்சோனி கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பு வாதங்களையும் சான்றுகளையும் ஒருங்கிணைத்து நெறிப்படுத்தும் அனுசரணை சட்டத்தரணியாகச் செயற்பட்டவர். தற்போதைய நிகழ்வுகள் தொடர்பான அவரது பார்வை அவரது அனுபவங்களிலிருந்து தமிழ் மக்களின் புரிதலுக்காக இங்கு தொடராக வெளிவருகிறது.



ஆஸ்திரேலியாவில் புலம்பெயர் தமிழர்களின் சட்டநலன்களில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட்டு வரும் அவர் முன்னர் ‘காலைக்கதிர்’ நாளிதழின் வாசகர்களால் நன்கு அறியப்பட்ட அரசியல் கட்டுரையாளர் என்பது குறிப்பிடத்தக்கது.

17

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



பேராசிரியர் ஸ்டான்லி விஜயசுந்தர



ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ

ஜே.ஆரின் பொருளாதரக் கொள்கைகளாலும், இந்திய ஒப்பந்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு மாகாண உரிமைகள் தருவதற்கான முயற்சிகளாலும், மாணவர்கள், புத்திஜீவிகள், அரசியல் கட்சிகள், பௌத்த சங்கங்கள் என பல தரப்பினரின் ஆதரவுகளைக் குறுகிய காலங்களில் பெற்று, 1986 இல் இருந்த ஜே.வி.பியின் தலைமுறை அல்லது பரிமாணம் தீயாகப் பரவினாலும், அதே நெருப்பு அவர்களது சந்தர்ப்பவாத செயற்பாடுகளினாலும், கட்டுக்கோப்பின்மையாலும், 1989 ஓகஸ்ட் தொடங்கி 1990 ஜனவரி வரையில் நடந்த இராணுவ நடவடிக்கைகளால் அவர்களது முக்கிய தலைவர்கள் விஜயவீர, உபதிஸ்ஸ கமநாயக்க, டி.எம். ஆனந்த, சாந்த பண்டார போன்றோரும் சுற்றாடலில் அவர்களுக்கு ஆதரவாகவும் இருந்த பலரும் கைது செய்யப்பட்டு அழிக்கப்பட்டார்கள்.

இந்தக் காலப்பகுதியில் அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு தமிழருக்கு மாகாண உரிமைகள் தரப்படுகின்றன, வடக்கு, கிழக்கு காணிகள் அவர்களுக்கு முன்னுருத்தாகின்றன என்ற கோஷங்களிலேயே அவர்கள் சிங்கள மக்களை ஒன்று சேரத் திரட்டினர்.

இந்தக் காலப்பகுதியில், குறிப்பாக 1986 – 1989 வரையான இந்தக் காலப்பகுதியில், இரு பகுதிகளினாலும் கொல்லப்பட்டவர்கள் 40 ஆயிரத்துக்கு மேல் எனக் கணக்கிடப்படுகிறது. ஓகஸ்ட் 1989 வரை இராணுவத்தினரால் பலர் கொல்லப்படவில்லை. ஆனால் ஜே.வி.பி. தரப்பினரால் மேற்கொள்ளப்பட்ட கொலைகள் தான்தோன்றித்தனமாகவும், கொள்கை பிடிப்பின் அடிப்படைகளில் இருந்து அல்லாமல், சந்தர்ப்பவாதங்களுக்காகவும் செய்யப்பட்டமையால் அதற்குத் தந்த நியாயங்கள் எடுபடவில்லை. ஆனால் 1989 ஓகஸ்டில் இருந்து 1990 ஜனவரி வரையான காலத்தில் சராசரி மாதத்திற்கு 1,500 பேருக்கு மேல் இராணுவத்தினராலும் அவர்களது துணைக் குழுக்களினாலும் கொல்லப்பட்டனர். ஆனால் ஓகஸ்ட் 1989 வகையான காலங்களில் ஜே.வி.பியினர் 17 ஆயிரத்துக்கும் மேலான கொலைகளைச் செய்தனர் எனக் கணக்கிடப்படுகிறது.

ஜே.வி.பியின் இந்தச் சடுதியான அழிவுக்குக் காரணங்களாக இருந்தவை பலவாறாக ஆய்வாளர்களால் பார்க்கப்படுகின்றன. முக்கியமாக, அது அவர்களின் எதேச்சாதிகாரம், சந்தர்ப்பவாதம், தாங்கள் சிங்கள – பௌத்தத்தின் விடுதலைக்கும் மீட்சிக்கும்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?



தொடர்ச்சி▲

போராடுகிறோம் என்ற திமிரில் தாங்கள் செய்வதை மக்கள் ஏற்றுக் கொண்டேயாக வேண்டும் என்ற நிலைப்பாடு எனப் பல. எந்த நோக்கங்களுக்காக மக்கள் கூடுகிறார்கள் என்பதைப் பற்றிச் சிந்திக்காமல் மக்கள் திரட்சியைக் கண்டால், அவர்கள் தங்களோடுதான் இருக்கிறார்கள் என்ற உற்சாக நிலை விஜயவீரவுக்கும் அவரைச் சுற்றி இருந்தவர்களுக்கும் எப்பொழுதுமே இருந்தது. இந்த பரிமாணத்தின் நிர்மூலத்தின் முன் அவர்கள் நடத்திய மாபெரும் கூட்டம் 1989இல் நுகேகொடவில் இடம் பெற்றது. அதில் 60 ஆயிரத்துக்கு மேல் மக்கள் பங்கு பற்றினர். ஜே.வி.பி. அங்கத்தினர்களும் ஆதரவாளர்களும் இந்தியாவுக்கு எதிரான சுலோகங்களைப் பட்டி தொட்டி எங்கும் ஒட்டி, வாகனங்களில் அவற்றை கண்டிமை படுத்தி, பறக்கச் செய்து, அதற்கு பத்து ரூபா வரியும் வசூலித்தார்கள்.

மக்களின் அபிலாசைகள், மனோபாவங்களை நாடி பிடித்துப் பார்க்காமல், எதேச்சாதிகாரத்தை அமுல்படுத்தும் அதே திமிர் மனோபாவங்கள் இப்போதும் உள்ளூராட்சித் தேர்தல் காலங்களில் வல்வெட்டித்துறையிலும் யாழ்ப்பாணத்திலும் பல இடங்களில் நடந்த கூட்டங்களில் சனத்திரளை வைத்து “ஊர் நம்முடனே, நாடும் நமதே“ என்ற பிரசாரங்கள் நடந்ததும், மக்களின் தீர்ப்பும் கவனிக்கப்பட வேண்டியவை. தமிழ் மக்களின் அபிலாசைகள் என்னவோ பிரபாகரனுக்கு சிலை வைக்கத் துடிப்பதுதான், அதை நாங்கள் செய்யத் திராணி உள்ளவர்கள், மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை உள்ள அரசும், நிறைவேற்று அதிகாரமும் எங்களது கைகளில் இருக்கின்றன என்ற பேச்சுக்கள் நுகேகொட கூட்டத்திலிருந்த எண்ணப்பங்குகளின் அடிப்படை கருத்தாக்கங்களின் தொடர்ச்சியே.

நுகேகொட கூட்டம் நடந்த காலகட்டம் முக்கியமானது. அதற்கு அரசாங்கம் அனுமதி அளித்திருந்தது. ஜனாதிபதி பிரேமதாஸ ஜே.வி.பி., விடுதலைப் புலிகள் ஆகிய இரு தரப்பினரையும் பொதுவெளிக்கு வந்து ஜனநாயக அரசியலுக்குத் திரும்புமாறு கோரியிருந்தார். விடுதலைப் புலிகள் பேச்சு வார்த்தைகளுக்கு தந்த சமிக்ஞைகளினால் 1989 ஜனாதிபதி பிரேமதாஸ பத்தரமுல்லையில் நடந்த அவரது கூட்டத்தில், இந்தியப் படைகள் வெளியேற வேண்டும் என்ற தனது பிரசித்தமான – உரிமையுடனான – கோரிக்கையை அதிகாரத்துடன் முன் வைத்தார். விடுதலைப் புலிகளை இது திருப்திப்படுத்தினாலும், ஜே.வி.பியினர், ஜனாதிபதி பிரேமதாஸா அவர்களுடன் பேச்சுக்களுக்கு இணங்காது, அவரது இந்தியப் படைகளின் வெளியேற்ற அறைகூவல் தங்களது எதிர்ப்புப் போராட்டங்களாலும், அதற்கான மக்களின் ஆதரவாலும்தான் நடைபெறுகின்றன என்று எண்ணினர். அதனை சாதகமாக்கி, இந்திய எதிர்ப்பை உக்கிரமாகவும், மக்கள் மேல் தங்களது அதிகாரப் பிடியை இறுக்கவும், இந்தியப் பொருள்களுக்கு எதிராக, அவற்றை மக்கள் பாவிப்பதற்கான தடைகளை விஜயவீர தமது கைப்பட எழுதிய அறிக்கையில் நுகேகொட கூட்டத்தின் மூலம் அறிவித்தது. அந்த அறிக்கையில் இந்தியப் பொருள்கள் எதனையும் மக்கள் பாவிக்கக் கூடாது எனவும், இந்திய வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள், இந்தியர்களால் நடத்தப்படும் வர்த்தக நிலையங்கள் பகிஷ்கரிக்கப்பட வேண்டும், அந்தப் பகிஷ்கரிப்பை மக்கள் கடைப்பிடிப்பதை தங்களது தேச பக்தி விடுதலை இராணுவம் (Patriotic Liberation Army) கவனிக்கும் என்ற பயமுறுத்தல்களும் தரப்பட்டன.

அந்த நேரத்தில், அவர்களுக்கு எதிராகப் பல்கலைக்கழக மாணவர்கள் இடையேயும், பொது நிறுவனங்களிலும் இருந்த எதிர்ப்புக்களைத் தங்களது ஆதரவாளர்கள், அங்கத்தினர் மூலம் வன்முறைகளைப் பாவித்து அதிகாரத்திற்குச் சவாலாகக் கட்டுப்படுத்தினர். அந்த இறுமாப்புக்களில் வன்முறைகளும்

தொடர்ச்சி▼

# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




தொடர்ச்சி▲

தான்தோன்றித்தனமும் பொதுமக்களை அதிருப்திப்படுத்துவனவாக இருந்தன. அந்த நேரங்களில் மாணவர் போராட்டங்களால் பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருந்தன. அவற்றைத் திறப்பதற்கான முயற்சிகள் நடைபெறுவதை முறியடிப்பதில் மும்முரம் இருந்தது. கொழும்பு பல்கலைக்கழக உபவேந்தர் கலாநிதி பி.விஜயசுந்தரவை ஜே.வி.பியினர் கொலை செய்தனர். அது பல்கலைக்கழகத்திலேயே நடந்தது. உயர்தரக் குடும்பத்தில் பிறந்து, இந்தப் பதவியை அவர் வகித்தாலும், புத்திஜீவிகள் மட்டத்திலே அவர் நன்கு மதிக்கப்பட்டவர். அரசியல் கலப்பற்றவர். மாணவர்களாலும் பெரிதும் விரும்பப்பட்டவர். அந்தக் கொலை

தொடர்ச்சி▼



# திசைகாட்டியின் திரிசங்கு நிலை; அந்தக் கட்சியின் கொள்கையா? அன்றி அரசியல் சந்தர்ப்பவாதமா?




தொடர்ச்சி▲

தேவையற்றது எனவும், அடாவடித்தனமானது என்றும் “ஜாதிக சிந்தனய” அமைப்பின் புத்திஜீவிகளினாலேயே பார்க்கப்பட்டது. அப்படியான கொலைகள் அறிவாளிகள், புத்திஜீவிகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளின் தொடக்கம் எனப் பல கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டன. அவ்வாறான கண்டிப்புக்களில் ஜே.வி.பிக்கு ஆதரவான மாணவர் சமுதாயம் கூட, அதற்கு எதிராக அவரது மரணச் சடங்கில் துண்டுப் பிரசுரங்களைக் கையளித்தாலும், பயம் காரணமாக மக்கள் அவற்றை வாசிக்காமல் தங்கள் காற்சட்டைகளில் மறைத்துக் கொண்டார்கள். ஜே.வி.பி. மாணவர் அமைப்புகளிலும் தொழிற்சங்கங்களிலும் பின்புலங்கள் தெரியாத பலர் இணைந்து கொண்டமையால், அவர்கள்நடத்தியதனிப்பட்டஅட்டூழியங்களை–கொலைகளை – தலைமை கட்டுப்படுத்த முடியாமல் இருந்தது. இந்தியப் பொருள்களின் பகிஷ்கரிப்பை பார்ப்பதற்காக உருவாக்கப்பட்ட தேசபக்தி விடுதலை இராணுவத்துக்காக யார் யாரெல்லாமோ தகைமை பெற்று, எதுவித வரையறையும் இல்லாமல் மக்கள் தண்டிக்கப்பட்டார்கள். வீதியில் வீட்டுக்காக வாங்கிச் சென்ற வெங்காயம், மிளகாய் பரிசோதனைக்கு உள்ளாகி, கடைகளுக்குச் சென்றவர்களே இந்த விடுதலை இராணுவ வீரர்களால் கொல்லப்பட்டனர். அப்படியான கொலைகள் ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் எனத் தொடங்கி, பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியாகி, இடதுசாரி கட்சிகள் என விரிந்து பலவாக வியாபித்தது.

அந்த நேரங்களிலும் இராணுவம் இவர்களுக்கு எதிரான அதிரடி நடவடிக்கைகளில் இறங்கவில்லை. அதனை சந்தர்ப்பவாதத்துக்கு தங்களுக்குச் சாதகமாக ஜே.வி.பி. தலைவர்கள் பீற்றிக்கொண்டனர். இராணுவத்தில் எல்லாம் தமது அங்கத்தினர்கள் உட்புகுந்து கொண்டு விட்டனர், 1971 காலத்தில் இது நாற்பது வீதம், இப்பொழுது அது எழுபது வீதமாகிவிட்டது, ஆகவே அவர்கள் எங்களுக்கு எதிராக, எங்களது விடுதலைப் போராட்டத்திற்கு எதிராக திரும்ப மாட்டார்கள், அவர்கள் தற்போது தமிழீழக் கோரிக்கையாளர்களையும் நாட்டைப் பிரிக்கப் போரிடும் விடுதலைப் புலிகளுக்கு எதிராகவும் புனிதப் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள், அவர்களது வீரமும் தியாகங்களும் மதிக்கப்பட வேண்டியவை, அந்த கடமைகளுக்கிடையேயும் மிக விரைவில் அவர்களும் எங்களுடன் சேர்ந்து சிங்கள – பௌத்தத்துக்கு நன்மை தராத ஆட்சியை அகற்ற முன்வருவார்கள் என அப்படியான நம்பிக்கைகளில் அவர்கள் பீற்றியது கூட, அதே பின்னணிகளில் இருந்த பலபேர் இராணுவத்தில் இணைந்திருந்தமையால் அவர்கள் தங்களை நிச்சயமாக ஆதரிக்க வேண்டும் என்ற கணிப்பிலாக இருக்கலாம். வறுமைக்கு சிறிது மேலானதும் நடுத்தர வர்க்கத்திலிருந்தும் இந்த இராணுவ வீரர்கள் இருந்தமையால் அவர்களுக்கும் ஒரு பிணைப்பு இருந்தது. அவர்கள் தமிழ் மக்களையோ விடுதலைக் குழுக்களையோ அந்தக் கோணத்தில் பார்க்கவில்லை.

பல்கலைக்கழகங்களில் தங்களது ஆதிக்கத்தை பெருக்க அவர்களது “தேச பிரேமை ஜனதா வியாபாரய” என்ற கட்டமைப்பின் கீழ் “தேச பிரிய சிஷ்ய வியாபாரய” என்ற மாணவர் அமைப்புகளை உருவாக்கி, அதேபோல் தொழிற்சங்கங்களிலும் சிங்கள – பௌத்த தேசத்துக்காக உட்புகுந்து அவர்கள் எல்லோரதும் பெயர்களிலும் விதவிதமான போஸ்டர்கள் அடித்து, கவர்ச்சியான துண்டு பிரசுரங்களும் விநியோகித்தார்கள். அவையெல்லாம் தாங்கள் இதுவரை ஆயுதப்படையில் அல்லது பொலிஸில் யாரையாவது கொன்று இருந்தால் அது துரோகியாக திடப்படுத்தப்பட்ட ஒருவரை அல்லது விடுதலை வீரரான தங்களை குறி வைத்த வரையோ, எங்களுக்கு ஆயுதங்கள் பெறுவதற்காக நாம் பொலிஸையோ, படையினரையோ தாக்கி இருந்தால் அவர்கள் தாமாகவே ஆயுதங்களை ஒப்படைத்த வரை கொன்றதில்லை என ஒரு பக்கம் தங்களை நியாயப்படுத்தி, படையினரெல்லாம் மிக விரைவில் இந்த அரசாங்கத்தை வெளியேற்ற தங்களுடன் கைகோர்க்க வேண்டும் என அந்த போஸ்டர்கள் மூலம் கேட்டனர். தங்கள் சார்பில் காலம் கனியும் என்றும் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

(தொடரும்)





# வல்வை நகர பிதா சிவாஜிலிங்கம்தான்

## கஜேந்திரகுமாரின் நிலைப்பாடு இது!

(பிரபாகரன் டிலக்சன்)

எம்.கே.சிவாஜிலிங்கம் நிச்சயமாக வல்வெட்டித்துறை நகரசபைக்குள் பிரவேசிப்பார். அதனை நான் உறுதியாக தெரிவிக்கின்றேன் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய பேரவையின் வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளராக எம்.கே.சிவாஜிலிங்கம் விகிதாசார வேட்பாளராக போட்டியிட்டார். ஆனால், தமிழ்த் தேசியப் பேரவைக்கு விகிதாசார ஆசனங்கள் கிடைக்காத நிலையில் அடுத்த-கட்ட நடவடிக்கைகள் தொடர்பில் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே மேற்கண்டவாறு கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

வல்வெட்டித்துறை நகர சபை தவிசாளர் பதவி சிவாஜிலிங்கத்திற்கே வழங்கப்பட வேண்டும். அதற்குரிய அணுகுமுறையை நாம் ஆராய வேண்டும். இது தொடர்பில் தேர்தல் ஆணையாளரோடும் உரையாடியிருக்கின்றேன்.

ஏனைய இடங்களிலும் எங்களுடைய முதன்மை வேட்பாளர்கள் தங்களுடைய வெற்றியையும் தாண்டி கட்சியினுடைய வெற்றிக்காக பணியாற்றினார்கள். இதனால் முதன்மை வேட்பாளர்கள் ஒரு சில இடங்களில் பின்னடைவைச் சந்திருக்கிறார்கள். அவர்கள் கட்சிக்காக வழங்கிய பங்களிப்பை ஒருபோதும் நிராகரிக்க முடியாது.

எம்.கே சிவாஜிலிங்கம் நிச்சயமாக வல்வெட்டித்துறை நகரசபைக்குள் பிரவேசிப்பார். அதனை நான் உறுதியாக தெரிவிக்கின்றேன். நாங்கள் பேசி ஒரு இணக்கப்பாட்டுக்குள் வருவோம். – என்றார்.

# தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி வடக்கு – கிழக்கில் மலரவேண்டும்

## ரெலோ திட்டவட்டமான தீர்மானம்

(கி.வசந்தன்)

வடக்கு, கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவில் தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலரவேண்டும். அதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம் என ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கட்சியின் பங்காளி கட்சிகளில் ஒனாறாகிய தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோவின்) பேச்சாளர் குருசாமி சுரேந்திரன் தெரிவித்தார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைமைக் குழுக் கூட்டம் வவுனியாவில் நேற்று இடம்பெற்றது. அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

உள்ளூராட்சி சபைகளைப் பலப்படுத்துவது தொடர்பாக நாம் கலந்துரையாடியுள்ளோம். அந்த வகையில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஊடாக தமிழ்த் தேசிய கட்சிகளோடு இணைந்து சபைகளைப் பலப்படுத்துவதாகத் தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு எங்கும் பரந்துபட்ட அளவிலே தமிழ்த் தேசிய கட்சிகளின் ஆட்சி மலர வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம். அந்த அடிப்படையில் தமிழ்த் தேசிய கட்சிகளின் தலைவர்களோடு, ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் தலைவர்கள் கலந்துரையாடல்களை முன்னெடுப்பதற்கு ஒத்துழைப்பது என முடிவு எட்டப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாகவே வவுனியா மாநகரசபை அமைய வேண்டும் என்பதும் எமது விருப்பம். எனவே அதன் அங்கத்துவ கட்சிகளின் பிரதிநிதிகளோடு எமக்கு கிடைத்த விகிதாசார ஆசனங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பது தொடர்பான கலந்துரையாடல்கள் இடம்பெற்றுள்ளன்ச். அதன் அடிப்படையில் முடிவை எட்டுவோம்




தமிழ்த் தேசிய கூட்டமைப்பாக தொடர்ந்து பயணிப்பது தொடர்பான முடிவுகள் எதுவும் இன்று எடுக்கவில்லை. இனி வரும் காலங்களில் இவ்வாறான விடயங்கள் தொடர்பாக எமது தலைமைக் குழு கூடி ஆராயவுள்ளது. – எனத் தெரிவித்தார்.








# ரெலோ சிறி சபாரட்ணத்தின் நினைவேந்தல் வவுனியாவில்!

(கி.வசந்தன்)

வவுனியாவில் சிறி சபாரட்ணத்தின் 39 ஆவது நினைவு தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) தலைவர் சிறிசபாரட்ணத்தின் நினைவு தினம் கட்சியின் ஏற்பாட்டில் வவுனியா மாநகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது சிறிசபாரட்ணத்தின் படத்திற்கு தீபம் ஏற்றி, மலர்மாலை அணிவித்து, மலர்தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது

நிகழ்வில் கட்சியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுபபினர் செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான கோவிந்தம் கருணாகரன், சிவசக்தி ஆனந்தன், வினோதரராதலிங்கம், ரெலோவின் ஊடகப் பேச்சாளர் சுரேன் குருசாமி, முன்னாள் வட மகாண சபை உறுப்பினர் செந்தில்நாதன் மயூரன் உள்ளிட்ட பலரும், மதகுருமார், கட்சி உயர் பீட உறுப்பினர்கள், கட்சி ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.















# கடலில் நடக்கும் திருட்டைத் தடுக்கக் கோரி மருதூர் சதுக்கத்தில் ஒன்று கூடிய மீனவர்கள்

(எஸ்.அஷ்ரப்கான்)

ஆழ்கடல் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் மீன்களைக் கடலில் வைத்தே திருடும் கும்பலுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்து அம்பாறை மாவட்ட மீனவர்கள் சாய்ந்த மருது மருதூர் சதுக்கத்தில் ஒன்றுகூடி கோரிக்கை விடுத்தனர்.

அம்பாறை மாவட்ட கரையோர பிரதேசங்களின் ஆழ்கடல் மீனவர் சங்கங்கள், மீனவர் சமாசங்கள், மீனவர் சம்மேளனங்கள், மீனவர்கள் போன்றோர் இணைந்து சாய்ந்தமருதில் நேற்று மாலை நடத்தி. – மீன் திருட்டை ஒழிப்பதுதொடர்பிலான–ஒன்றுகூடலில்கலந்து கொண்டு கருத்து தெரிவித்த மீனவர்கள் கூறியவை வருமாறு:–

பாதுகாப்பு படையினரும் இந்த ஈனச் செயலுக்கு உடந்தையாக இருக்கின்றமை மோசமானது. ஆழ்கடலில் இயற்கையுடன் போராடி அன்றாட வாழ்வாதரத்தைக் கொண்டு செல்ல மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் செயற்பாட்டை இனியும் அனுமதிக்க முடியாது.

சட்டத்தின் பிடியிலிருந்து யாரும் இலகுவாகத் தப்பிவிட முடியாது. இலங்கை கடற்படை, விசேட அதிரடி படை, பொலிஸாரின் கூட்டு முயற்சியில் இந்த திருட்டு நடவடிக்கைகளை ஒழிக்க விசேட திட்டத்தை செயற்படுத்தி மீனவர்களின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வை பெற்றுத்தர உறுதியளிப்பதாக பலரும் தெரிவிக்கிறார்கள். ஆனால் அவை நடந்தபாடில்லை. நாடாளுமன்றத்திலும் கடந்த காலங்களில் எங்களின் பிரச்சினைகள் பேசப்பட்டுள்ளன.



நாங்களும் கடந்த காலங்களில் ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாதுகாப்பு உயர் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகள், மீன்பிடி திணைக்கள அதிகாரிகள் எனப் பலரிடமும் பேசியும், கலந்துரையாடியும் எவ்வித ஆக்கபூர்வமான தீர்வும் கிட்டவில்லை.

மட்டக்களப்பு மாவட்ட களுவாஞ்சிகுடி, செட்டிபாளையம், தேற்றாத்தீவு உட்பட அதை அண்டிய பிரதேசங்களிலையே ஆழ்கடல் மீனவர்களின் மீன்கள் திருட்டு போகின்றன. 40 (மணிக்கு 40 கிலோ மீட்டர்) குதிரை வேகம் கொண்ட சிறியரக மீன்பிடி படகுகளை கொண்டே இந்த திருட்டு சம்பவங்கள் நடாத்தப்பட்டு வருகிறது. மீன்களுடன் சேர்த்து மீன்பிடி வலைகளையும் வெட்டி எடுத்துச் செல்வதால் எங்களுக்கு பலத்த நஷ்டங்களும், கஷ்டங்களும் ஏற்படுகின்றன். எங்களின் உயிருக்கும் உத்தரவாதமில்லை. பலத்த அச்சுறுத்தலை நாங்கள் தினம் தினம் எதிர்கொள்கிறோம்.

எனவே, எங்களின் குரல் உரியவர்கள் காதுக்கு சென்று எங்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கிடைக்காது போனால் அடுத்த கட்ட நடவடிக்கையாக பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை செய்வதுடன் மிகப்பெரிய எதிர்ப்பு நடவடிக்கையையும், தொழிற்சங்க போராட்டத்தையும் முன்னெடுப்போம். – என்றனர்.

இந்த கூட்டத்தில் தேசிய மக்கள் சக்தி தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ஏ. ஆதம்பாபா, காரைதீவு பிரதேச சபை உறுப்பினர் ஏ.பர்ஹான், சாய்ந்தமருது வர்த்தக சங்க தலைவர் எம்.எஸ்.எம். முபாரக் மற்றும் மீனவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பாரிய பிரச்சினையாகிய இந்த விடயத்தை உரிய அமைச்சர் மற்றும் அதிகாரிகளுடன் பேசி, அதற்கான தீர்வினை பெற்று தருவார் என இங்கு குறிப்பிட்டார்.





# சிறுமி அம்சிகா தொடர்பாக நடக்கும் போராட்டத்தினால் நல்லாசிரியர் சமூகத்தை அவமானப்படுத்தி விடக் கூடாது

## மனோ கணேசன் எம்.பி. வலியுறுத்தல்

தலைநகர தமிழர்களின் கல்விக் கட்டமைப்பு சிதைவதற்கு, சிறுமி அம்சிகாவின் அகால மரணம் காரணமாக அமைந்து விட கூடாது. நீதி நிலை நாட்டப்பட வேண்டும். சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும். உண்மை வெளியே வர வேண்டும். ஆனால், கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும் கல்வி என்ற கட்டமைப்பின் ஏணிகளான எங்கள் ஒட்டு மொத்த நல்லாசிரியர் சமுதாயத்தை, அவமானம், அதிருப்தி, அதைரியம், விரக்தி ஆகிய உணர்வலைகளுக்குள் ஒருபோதும் தள்ளி விட கூடாது. "ட்யூடரிகள்" என்ற தனியார் வகுப்புகள் வேறு, எமது தேசிய, மாகாண பாடசாலைகள் என்பன வேறு என்பதையும் நாம் மனதில் கொள்ள வேண்டும். ஆகவே, சமூக அழுத்தங்களை தரும் போராட்டங்களும், சமூக ஊடகங்களும் "நீதியைக் கோர" வேண்டுமே தவிர, வரம்பு மீறி, எமது ஆசிரியர் சமூகத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவமானப்படுத்தி விட முனையக் கூடாது.

கொழும்பு பம்பலபிட்டி இராமநாதன் இந்து மகளிர் கல்லூரியின் அதிபர், நடந்த சம்பவம் பற்றிய தனது அறிக்கையை, மாதங்களுக்கு முன்பே உரிய வேளையில் கல்வி அமைச்சிடம் சமர்ப்பித்துவிட்டார்என்றும்,குறிப்பிட்டஅறிக்கை அடங்கிய கோப்பை பரிசீலித்து நடவடிக்கைகளை எடுக்க கல்வி அமைச்சு அதிகாரிகள் தவறி விட்டார்கள் என்றும் இப்போது அறிகிறேன். அப்போதே கல்வி அமைச்சு மட்டத்தில் நடவடிக்கை எடுத்திருந்தால் விவகாரம் இந்தளவு தூரம் வந்திருக்காது. இது எதுவும் அறியாமல் கல்வி அமைச்சரான பிரதமர் ஹரிணி அமரசூரிய அடுத்த நாள் நாடாளுமன்றத்துக்கு வந்து அறிக்கை கோருகிறார். மேலும், சம்பவம் கைமீறி போய் மக்கள் தெருவுக்கு வந்த பின்னர், நானும் இதை நாடாளுமன்றத்தில் பிரஸ்தாபித்த பின்னர், "இடமாற்றம்" என்றும், "கட்டாய விடுமுறை" என்றும் அவரது அமைச்சு அவசர அவசரமாக தடுமாறியமை காலம் கடந்த செயல்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இது தொடர்பில் மனோ கணேசன் எம்.பி. விடுத்துள்ள விசேட அறிக்கையில் கூறி இருப்பதாவது:-

சமூகத்தில் இன்று நான் ஏதாவது ஒரு இடத்தில் இருக்கின்றேன் என்றால் அதன் பின்னால் எனக்குக் கற்று தந்த நூற்றுக்கணக்கான நல்லாசிரியர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் எனக்கு கல்வியை மட்டும் கற்று தரவில்லை. பண்பாடு, நாகரிகம் உள்ளிட்ட நற்பண்பு கலாசாரத்தையும் கற்று தந்தார்கள். "கற்க கசடற கற்பவை கற்றபின் நிற்க அதற்குத் தக" என்றும் மிக தெளிவாக திருக்குறள் பொய்யாமொழியை என் மனதில் ஆழமாக பதித்து சென்றார்கள்.

சிறுமி அம்சிகா விவாகரத்தை முதன் முதல் நாடாளுமன்றத்தில், விசேட தேசிய பிரச்சினையாக நான் முன் வைத்த போது, நான் எவரது பெயர்களையும் குறிப்பிடவில்லை. பாடசாலைகளின் பெயர்களை கூட குறிப்படவில்லை. தேசிய சிறுவர் பாதுகாப்பு ஆணைக்குழு உட்பட அரசின் அசமந்த போக்கைச் சுட்டி காட்டி, நியாயத்தைக் கோரி மட்டுமே பேசினேன். பெண்கள், சிறுவர் விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜ் எனக்கு தந்த பொறுப்பற்ற பதில்களை கண்டித்து மட்டுமே பேசினேன்.

அரசியல் இலாபம் பெறவும் நான் இந்த விவகாரத்தை பயன்படுத்திப் பேசவில்லை. அரசியல் ஆதாயம் தேவை என்றால், அகால மரண சம்பவம் நடந்த 29 ஆம் திகதிக்கு, அடுத்த நாளே விசேட ஊடகவியலாளர் மாநாட்டை நடத்தி, ஆளும் கட்சியின் வட கொழும்பு அமைப்பாளர் மீது அரசியல் குற்றசாட்டுகளை முன் வைத்து, நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் வாக்கு வேட்டை நடத்தி இருக்கலாம். அதை நான் செய்யவில்லை. அப்படியான வாக்குகள் எனக்கு தேவையும் இல்லை. "இது அரசியல் அல்ல, நீதி கோரல்" என நான் இதை நாடாளுமன்றத்தில் சொன்ன போது, தேசிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட அமைச்சர்களான எனது நண்பர்கள் சிலர் என்னிடம் தனிப்பட்ட முறையில் உடன்பட்டார்கள்.

எனக்கு கல்வியும், நற்பண்பு கலாச்சாரத்தையும் கற்று தந்த நல்லாசிரியர்களின் அன்றைய வழிகாட்டல்கள் காரணமாகவே நான் பொது வெளியிலும், நாடாளுமன்றத்திலும் கண்ணியமாக நடந்து கொள்கிறேன். ஆகவே எக்காரணம் கொண்டும் நமது நல்லாசிரியர்கள் மனம் தளர்ந்து, விரக்தி அடையும் விதத்தில் சிறுமி அம்சிகாகாவுக்கு நீதி கோரும் போராட்டத்தை, சமூகமும், சமூக ஊடகங்களும் கொண்டு செல்லக் கூடாது என மிக உறுதியுடன் கூறுகிறேன். தலைநகர தமிழர்களின் தேசிய பாடசாலைகள், மாகாணசபை பாடசாலைகள் அடங்கிய தமிழர் கல்வி கட்டமைப்பு சிதைந்து விட்டால், நமது ஒட்டு மொத்த மாணவர் சமூகமே மிக பெரும் பாதிப்புகளை அடையும். அதற்கு இடம் கொடுத்து விட கூடாது என்ற பேருண்மையை நாம் மனதில் கொள்ள வேண்டும் என்றும் கோருகிறேன். – என்று உள்ளது.




# தமிழ்க் கட்சிகளை மீள அங்கீகரித்து தமிழ் மக்கள் சொன்ன செய்தி!



புருஜோத்தமன் தங்கமயில்

“தமிழரசுக் கட்சி கசிப்பும் காசும் கொடுத்துத்தான் நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வென்றது..” என்று அமைச்சர் பிமல் ரட்நாயக்க குற்றஞ்சாட்டியிருக்கிறார். உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் கடந்த வியாழக்கிழமை உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறியிருக்கிறார். பொதுத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி, வடக்குக் கிழக்கில் கணிசமான நாடாளுமன்ற உறுப்பினர்களை வெற்றி கொண்டது. குறிப்பாக, யாழ்ப்பாணத்திலும் வன்னியிலும் தேசிய மக்கள் சக்தி, தமிழ்த் தேசியக் கட்சிகளை பின்னுக்குத் தள்ளியிருந்தது. நேரடியாக ஐந்து நாடாளுமன்ற உறுப்பினர்களை வென்றிருந்தது. அதனைத் தொடர்ந்து, வடக்கு வரும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் தமிழ் மக்களின் பிரதான கட்சி, தேசிய மக்கள் சக்திதான் என்று பிமல் கூறி வந்திருக்கிறார். உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரச்சாரங்களின் போதும் ”தமிழ்க் கட்சிகளை இலகுவாக தோற்கடிப்போம், அவர்களை தமிழ் மக்கள் புறக்கணித்துவிட்டார்கள்..” என்றும் தெரிவித்திருக்கின்றார். இந்த நிலையில், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்குக் கிழக்கில் தேசிய மக்கள் சக்தியை தோற்கடித்திருக்கின்றது. கடந்த பொதுத் தேர்தலோடு ஒப்பிடும் போது, தமிழரசுக் கட்சி யாழ்ப்பாணத்தில் தன்னுடைய வாக்கு வங்கியை இரண்டு மடங்கிற்கு மேலாக அதிகரித்திருக்கின்றது. இந்த நிலையில்தான், தங்களின் பின்னடைவினை ஏற்றுக்கொள்வதற்கான மனத்தடையை அடுத்து, தமிழரசுக் கட்சி மீது “கசிப்பு, காசு” என்று அவதூறினை பிமல் சுமத்தியிருக்கிறார்.

தேசிய மக்கள் சக்திதான் இப்போது ஆளும் கட்சி என்பதை அதன் தலைவர் அநுர குமார திஸநாயக்க தொடங்கி, அதன் கடைக்கோடி தொண்டன் வரை இன்னமும் நம்புகிறார்கள் இல்லை. எப்போதுமே எதிர்க்கட்சிக்குரிய மனப்பான்மையில் நின்றுதான் விடயங்களை அணுகுகிறார்கள். தமிழரசுக் கட்சி கசிப்பையும், காசினையும் கொடுத்து தேர்தலை வென்றி கொண்டது என்று அவதூறினைப் பரப்புவதற்கு முன்னர், ஓர் அரசாங்கம் செயற்படுத்த வேண்டிய சட்ட ஆட்சி தொடர்பில் கரிசனை கொண்டிருக்க வேண்டும். கசிப்புப் பாவனை நாட்டில் தடை செய்யப்பட்டது. அப்படியான நிலையில், கசிப்பினை ஒரு கட்சி விநியோகிக்கின்றது என்று தெரிந்தால், அதற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். அதுதான் அரசாங்கத்தின் பொறுப்பு. அது தொடர்பில் தேர்தல் நாளுக்கு முன்னர் வரையில், எந்த வெளிப்படுத்தல்களையும் தேசிய மக்கள் சக்தியினர் செய்யவில்லை. மாறாக, தென் கிழக்கு ஆசிய நாடுகளில் பகிரப்பட்ட மதுப் போத்தல்களின் படங்களை எடுத்து, தேசிய மக்கள் சக்தியின் வேட்பாளர்கள் மற்றும் அதன் ஆதரவாளர்கள் சிலர் தமிழ்க் கட்சிகள் மதுப்போத்தல்களை பகிர்வதாக கூறினார்கள். ஆனால், அவர்கள் பகிர்ந்த படங்கள் வெளிநாடுகளில் பகிரப்பட்ட படங்கள் என்பதை இணையம் இலகுவாகக் காட்டிக் கொடுத்து விட்டது. அப்படியான நிலையில், தேசிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சி தங்களை தோற்கடித்துவிட்டது என்ற வெறுப்பில், தமிழ் மக்களின் ஆணை தொடர்பில் வெறுப்புப் பிரச்சாரத்தை மேற்கொள்கின்றது என்றுதான் பிமலின் பேச்சை எதிர்கொண்டாக வேண்டும். ஏனெனில், தமிழ் மக்கள் தேசிய மக்கள் சக்திக்கு வாக்களிக்கும் போது, அந்த ஆணைக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று அந்தக் கட்சி கூறி வந்திருக்கின்றது. அதன்போக்கில்தான், தமிழ் மக்களின் பிரதான கட்சி தேசிய மக்கள் சக்தி என்றும் வாதிட்டது. ஆனால், ஆட்சிக்கு வந்து சில மாதங்களிலேயே தமிழ் மக்களிடம் கணிசமான அதிருப்தியைப் பெற்றுவிட்ட தேசிய மக்கள் சக்தி, தமிழரசுக் கட்சியிடம் தோற்றுவிட்டது. அதனைப் பொறுத்துக் கொள்ள முடியாமல், மக்களின் ஆணையை கேலிப்பொருளாக்குவது ஜனநாயக விரோதமாகும். ஆட்சிக்கு வந்தது முதல், தொடர்சியாக அடக்குமுறைகள், அச்சுறுத்தல்களில் கவனம் செலுத்தி வரும், தேசிய மக்கள் சக்தி, இறுதியாக கையிலெடுத்திருப்பது கசிப்பினையாகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் மற்றும் பொதுத் தேர்தல் காலங்களில், ரணில் ராஜபக்ஷ ஆட்சிக் காலத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் அவர்களின் சிபாரிசின் பெயரிலும் வழங்கப்பட்ட சாராயக்கடை அனுமதிப்பத்திரங்கள் தொடர்பில் வெளிப்படையான நடவடிக்கை எடுப்போம் என்று

தொடர்ச்சி▼



# தமிழ்க் கட்சிகளை மீள அங்கீகரித்து தமிழ் மக்கள் சொன்ன செய்தி!

தொடர்ச்சி▲

தேசிய மக்கள் சக்தி வாக்குறுதி அளித்து வந்திருக்கின்றது. ஆனால், ஆட்சிக்கு வந்ததும், சாராயக்கடை முதலாளிகளுடன் கள்ளத் தொடர்பினைப் பேணிக் கொண்டு, விவரங்களை வெளியிடாமல் ஒதுங்கிக் கொண்டுவிட்டது. அப்படியான உருட்டுப் பிரட்டுக்கு தேசிய மக்கள் சக்தி சொந்தக்காரர்கள். அவர்கள்தான் இப்போது, கசிப்பு பற்றி பேசுகிறார்கள். முதலில், ஒரு அரசாங்கத்துக்குரிய ஆளுமையை அந்தக் கட்சி வெளிப்படுத்த வேண்டும். இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியினர் வடக்குக் கிழக்கில் வேட்பாளர்களை எவ்வாறு தேடியெடுத்தார்கள் என்று சற்று ஆராய்ந்து பார்த்தாலே, அது பரப்பிய சாதியவாதத்தினை புரிந்து கொள்ள முடியும். அதுபோல, தேர்தல் பிரச்சாரத்தின் போதும் சாதியை முன்னிறுத்திய நடவடிக்கைகளை அந்தக் கட்சியும் முன்னெடுத்தது. புதிய புரட்சி மாற்றக் குழுவினராகத் தங்களை வெளிப்படுத்தும் அந்தக் கட்சி, சாதிய வாதத்தை கிளறிவிட்டு தேர்தலை எதிர்கொள்ள முனைந்தது என்பது அற்பத்தனமானதாகும். வர்க்க ஏற்றத்தாழ்வுகளைக் களைந்து அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்கிற இடது சாரிய சிந்தாந்தத்தினை, சாதிய வாதத்தைக் கிளறுவதற்காக கையாள்வதை ஏற்றுக் கொள்ள முடியாது. அனைத்துத் தரப்பு மக்களுக்கும் அவர்களுக்குரிய பிரதிநித்துவத்தைப் பெற்றுக் கொள்வதுதான் ஜனநாயகத்தின் அடிப்படை. ஆனால், அதனைப் புறந்தள்ளி, சமூகத்துக்குள் சாதியவாதத்தைக் கிளறுவது என்பது ஜனநாயக விரோதமாகும்.

இன்னொரு பக்கம், பொய் புரட்டின் பக்கத்தில் நின்று தமிழ் மக்களை ஏமாற்றும் வேலைகளில் தேசிய மக்கள் சக்தி ஈடுபட்டுக் கொண்டிருந்தது. வடக்கில் சுமார் ஆறாயிரம் ஏக்கர் காணிகளை கபளீகரம் செய்யும் வர்த்தமானியை வெளியிட்டுவிட்டு, அந்தக் கட்சி அது தொடர்பில் எதுவும் தெரியாதவர்கள் போன்று செயற்பட்டார்கள். குறிப்பாக, அந்தக் கட்சியின் யாழ்ப்பாண நாடாளுமன்ற உறுப்பினரான இளங்குமரன், காணி அபகரிப்புத் தொடர்பில் வர்த்தமானியே வெளியிடப்படவில்லை, அது போலியான செய்தி என்று தொலைக்காட்சி விவாதமொன்றில் வெளிப்படையாகக் கூறினார். அதுபோல, யாழ். மாநகர சபையின் முதல்வர் வேட்பாளராக போட்டியிட்ட கபிலன் சுந்தரலிங்கத்தின் வதிவிடம் தொடர்பில் பொய்யான தகவல்களை வழங்கி, மக்களை குழப்புவதற்கு எத்தனித்தார்கள். ஏழாலையில் வதியும் கபிலன், யாழ். மாநகர எல்லைக்குள் வதிபவராகக் காட்டி மோசடி வேலைகளை அந்தக் கட்சி செய்தது. இந்தக் குட்டுக்களை தமிழரசுக் கட்சி வெளிப்படுத்தியதும், தமிழரசுக் கட்சியினரை நோக்கி மிரட்டல் விடுக்கும் தோரணையை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகரன் வெளிப்படுத்தினார். இறுதியில், ஏழாலையில் வாக்களிப்பைக் கொண்டிருந்த, கபிலன் வாக்களிக்காமலேயே இருந்துவிட்டார். தான் ஏழாலையில் வாக்களித்து, அது வெளியாகிவிட்டால், தங்களின் மோசடி அம்பலப்பட்டுவிடும் என்று. ஆனால், அவரின் வாக்களிப்பதற்கான வாக்காளர் அட்டை சமூக ஊடகங்களில் ஏற்கனவே பரவிவிட்டது. மக்கள் விடுதலை முன்னணியும் புலமைத்துவ தரப்பினரும் இணைந்து நிறுவியதுதான் தேசிய மக்கள் சக்தி என்பது அந்தக் கட்சியினரின் வாதம். ஆனால், அந்தக் கட்சி ஆட்சிக்கு வந்தது முதல், பல மோசடி வேலைகளினால் மாட்டிக் கொண்டு வந்திருக்கின்றது. அதனால்தான், அந்தக் கட்சி நாடாளுமன்றத் தேர்தலில் பெற்ற வாக்குகளில் இருந்து சுமார் இருபது லட்சம் வாக்கிழப்பினை ஐந்து மாதங்களுக்குள் சந்தித்திருக்கின்றது.

வடக்குக் கிழக்கில் தமிழ் மக்களின் முதன்மைக் கட்சியாக தமிழரசுக் கட்சி தன்னை மீண்டும் நிரூபித்து நிறுவிக் கொண்டிருக்கின்றது. 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டு இரண்டு இலட்சத்து எண்பத்து எட்டாயிரம் வாக்குகளைப் பெற்றிருந்தது. ஆனால், இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்து மூன்று இலட்சத்து ஏழாயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. அதாவது, இருபது

தொடர்ச்சி▼






# தமிழ்க் கட்சிகளை மீள அங்கீகரித்து தமிழ் மக்கள் சொன்ன செய்தி!

தொடர்ச்சி▲

ஆயிரம் வாக்குகள் அதிகமாகும். இது தமிழரசுக் கட்சியின் கடந்த தேர்தல் பின்னடைவிலிருந்து மிக விரைவான மீள் எழுச்சியாகும். அத்தோடு, உள்ளூ ராட்சி மன்றத் தேர்தல் நடைமுறைகளை சரியாக உள்வாங்கி அதற்கு ஏற்றால்போல் செயற்பட்டதன் படி கிடைத்த வெற்றியாகும். தனிக்கட்சியாக மூன்று லட்சத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுக் கொண்டதன் மூலம், தமிழர் தாயகத்தில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகளை நோக்கிய செய்தியையும் தமிழரசுக் கட்சி சொல்லியிருக்கின்றது. அடுத்து, மாகாண சபைத் தேர்தல்கள் வரவிருக்கின்றன. அதில், ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக இணைந்தாக வேண்டும் என்ற கடப்பாட்டினை மக்கள் பிரதிபலித் திருக்கிறார்கள். தமிழரசுக் கட்சிக்கு அடுத்த நிலை யில், ஒரு தமிழ்த் தேசியக் கட்சியாக ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியே (சங்கு) இருக்கின்றது. அது, வடக்கு கிழக்கில் சுமார் 85 ஆயிரம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. இந்த இரண்டு தரப்பினரும் இணைந்து உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைப்பதற்கான நிலையே காணப்படுகின்றது. தலைவர்களுக்கு இடையில் ஏற்கனவே இணக்கப்பாடு காணப்பட்டுவிட்டது. எனினும், உத்தியோகபூர்வமாக இரு கட்சியின் தலைவர்களும் சந்தித்து, அதனை ஊடகங்களில் எதிர்வரும் நாள்களில் அறிவிப்பார்கள். இந்தக் கூட்டு, மாகாண சபையில் வடக்கு கிழக்குப் பூராவும் நான்கு லட்சம் வாக்குகளை வைத்திருக் கின்ற கூட்டாக மேலெழும். இந்தக் கூட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரை மீள் பிரயோகத் துக்கு கொண்டுவரலாம். இன்னொரு தமிழ்த் தேசியக் கூட்டாக கொள்ளப்படும் தமிழ்த் தேசியப் பேரவை (சைக்கிள்) யாழ்ப்பாணத்துக்குள் மாத்திரம் கணி சமான வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. 2018 உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியாக தனித்து பெற்ற வாக்குகளை விட, இம்முறை அந்தக் கூட்டு குறைந்த வாக்குக ளையே பெற்றிருக்கின்றது. அதிலும், நகரங்களில் மாத் திரந்தான் அது வாக்குகளைச் சேர்ந்திருக்கின்றது. வல்வெட்டித்துறையில் சிவாஜிலிங்கத்தின் பங்கும், சாவகச்சேரியில் அருந்தவபாலன், யாழ்ப்பாணத்தில் ஐங்கரநேசனின் ஆகியோரின் பங்கும் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவை. தமிழ் மக்கள் கூட்டணி (மான்) நல்லூரில் கணிசமான வெற்றியை பெற்றிருக்கின்ற போதிலும், மற்றைய இடங்களில் சில நூறு வாக்கு களையே பெற்றிருக்கின்றது. அதாவது, கடந்த பொதுத் தேர்தலைவிட அந்தக் கட்சி குறைந்த வாக்கு களையே பெற்றிருக்கின்றது. அந்தக் கட்சிக்கும் தமிழரசுக் கட்சியோடு கூட்டணி அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலை காணப்படுகின் றது.

தொடர்ச்சியாக பொறுப்புணர்வோடு தாங்கள் வழங்கி வந்திருக்கின்ற ஆணையை தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையில் மோதிக் கொள்வ தற்காகப் பயன்படுத்தி காலத்தை வீணடித்திருக் கின்றன என்ற கோபம் தமிழ் மக்களுக்கு இருந்து வந்தது. அதனால்தான், கடந்த பொதுத் தேர்த லில் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு பலத்த பின்ன டைவை பரிசாக வழங்கினர். அந்தத் தோல்விப் பரிசின் விளைவினை அறிந்து கொண்ட தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்கு இடையில் மோதிக் கொள்வதை விட்டு, பொது எதிரியை நோக்கி தங்களது கவனத்தைத் திரும்பிக் கொண்டன. அதனால்தான் மக்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசி யக் கட்சிகளை வெற்றிபெற வைத்திருக்கிறார்கள். இந்த நிலையை தொடர்ந்தும் தமிழ்க் கட்சிகள் பேண வேண்டும். இல்லையென்றால், மீண்டும் தேசிய மக்கள் சக்தி போன்ற ஏதோவொரு தென் இலங்கைக் கட்சிக்கு வாக்களிக்க வேண்டி வரும் என்று தமிழ் மக்கள் உணர்த்தியிருக்கிறார்கள். இந்தச் செய் தியை உள்வாங்கிக் கொண்டு அடுத்த மாகாண சபைத் தேர்தல்களை நோக்கி(யும்) தமிழ்த் தேசியக் கட்சிகள் பயணப்பட வேண்டும். அதனைப் புரிந்து கொள்ளாமல், தங்களுக்கு இடையில் மீண்டும் மோதி, விடயத்தைபோட்டு உடைத்தால், மாகாண சபைத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தியிடம் வடக்கையும் கிழக்கையும் இழந்து விட்டு விட்டத்தைப் பார்த்துக் கொண்டிருக்க வேண்டி வரும். தெளிவும் அதன்படி வரும் புரிந்துணர்வோடும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இயங்க வேண்டும். அதனைவிடுத்து, மற்றைய தமிழ்க் கட்சியின் வெற்றியைக் கண்டு வயிறு எரிந்து மக்கள் மத்தியில் வெறுப்பு பிரச்சாரத்தை முன்னெடுத்தால், காலம் அந்தக் கட்சிகளை தூக்கி தூர எறிந்துவி டும். ஏற்கனவே, கடந்த பொதுத் தேர்தலில் பெற்றுக் கொண்ட பாடத்தை எண்ணிப் பார்க்க வேண்டும். அதனைவிடுத்து, தனிக் கட்சி, தனிநபர் வெறுப்பினால் தமிழ்த் தேசிய அரசியலை குழப்பாமல் இருக்க வேண்டும். இல்லையென்றால், இப்போது கிடைத் துள்ள சின்ன வெற்றியை, அடுத்த கட்டத்துக்கு நகர்த் திச் செல்லவே முடியாது.





# போர் நிறுத்தம் அறிவித்த 3 மணி நேரத்தில் எல்லையில் மீண்டும் அத்துமீறிய பாகிஸ்தான்

## பதிலடிக்கு தயாராகும் இந்தியா

போர் நிறுத்தம் செய்து கொள்வதாக அறிவித்த பின்னர் அதையும் மீறி பாகிஸ்தான் இந்திய எல்லைக்குள் நேற்று இரவு ட்ரோன்களை ஏவி தாக்குதல்கலை நடத்தியுள்ளது. இதனால் எல்லையில் பதற்றமான சூழல் நிலவுகிறது.

இந்த நிலையில், இரவு 11 மணிக்கு செய்தியாளர்களுடன் பேசிய இந்திய வெளியுறவுச் செயலர் விக்ரம் மிஸ்ரி, பாகிஸ்தான் தாக்குதலைத் தொடர்ந்தால் முழுவீச்சில் தக்க பதிலடி கொடுக்க இராணுவத்துக்கு அறிவுறுத்தல்களை அரசு வழங்கியிருப்பதாக தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“இத்தகைய அத்துமீறல் தாக்குதல் நடவடிக்கைகளைக் களைய பாகிஸ்தான் தீவிரத் தன்மையுடனும் முழு பொறுப்புடனும் செயல்பட்டு உரிய நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள பாகிஸ்தானை இந்தியா வலியுறுத்துகிறது.

இந்திய இராணுவத்தினர் இந்தச் சூழலில் மிகுந்த உன்னிப்புடன் நிலைமையைக் கண்காணித்து வருகின்றனர். சர்வதேச எல்லை மற்றும் எல்லை கட்டுப்பாட்டு பகுதிகளில், எல்லை தாண்டிய அத்துமீறல்கள் தொடர்ந்தால் முழுவீச்சில் எதிர்வினையாற்ற இராணுவத்துக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. இராணுவம் பாகிஸ்தான் நடத்தி வரும் தாக்குதல்களுக்கு தக்க பதிலடி கொடுத்து வருகிறது.” என்றார்.

போர் நிறுத்தம் நேற்று மாலை 5 மணிக்கு அமலுக்கு வந்ததாக அறிவிக்கப்பட்ட நிலையில், இரவு 8 மணி அளவில் ஜம்மு-காஷ்மீர் உள்ளிட்ட இந்திய எல்லை பகுதிகளில் பாகிஸ்தான் மீண்டும் அத்துமீறி தாக்குதலை தொடங்கியது என தெரிவிக்கப்படுகிறது.

கதுவா, சம்பா, சுந்தர்பானி, அக்னூர், உதம்பூர், நவ்சோரா உள்ளிட்ட பகுதிகளில் ட்ரோன்கள் மூலம் தாக்குதல் நடத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

# மீண்டும் திறக்கப்பட்டது பாகிஸ்தான் வான் எல்லை




தற்காலிகமாக மூடப்பட்ட பாகிஸ்தானின் வான் பரப்பு மீளவும் திறக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது.

பாகிஸ்தானில் உள்ள 3 விமானப் படை தளங்களை குறி வைத்து இந்தியா நேற்று தாக்குதல் நடத்தியது.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பதற்றம் அதிகரித்து வருந்த நிலையில் இரு நாடுகளும் பரஸ்பரம் தொடர்ச்சியான தாக்குதல்களையும் மேற்கொண்டது.

மேலும், பாகிஸ்தானின் ராவல் பிண்டியில் உள்ள நூர் கான் விமானப் படைத்தளம், பஞ்சாப் சார்கோர்ட்டில் உள்ள ரபீக் விமானப்படைத்தளம், இஸ்லாமாபாத்தின் முடீர் பகுதியில் உள்ள விமானப்படைத்தளத்தை குறிவைத்து இந்தியா தாக்குதல் மேற்கொண்டது.


இதன் எதிரொலியாக பாகிஸ்தான் தங்கள் நாட்டு வான்பகுதியை தற்காலிகமாக மூட நடவடிக்கை மேற்கொண்டதுடன் , வான் பரப்பில் பயணிகள் விமானங்கள் பறக்கவும் தடை விதிக்கப்பட்டது.

இந்நிலையில் தற்காலிகமாக மூடப்பட்ட பாகிஸ்தானின் வான் பரப்பு அனைத்து வணிக மற்றும் இராணுவ விமானங்களுக்கும் திறந்துள்ளது.

பாகிஸ்தான் விமான நிலைய ஆணையம் இந்த விடயத்தினை உறுதிப்படுத்தியுள்ளது.

இந்தியாவும் பாகிஸ்தானும் முழுமையான போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொண்ட நிலையில் வான் எல்லைகள் திறக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# 30 நாள்கள் போர் நிறுத்தத்தை வலியுறுத்த பிரித்தானிய பிரதமர் உக்ரைன் விஜயம்

பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டாமர், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவெல் மெக்ரன் ஆகியோர் உக்ரைன் - கியவ் நகருக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முழுமையான மற்றும் நிபந்தனையற்ற 30 நாள்கள் போர் நிறுத்தத்தை ரஷ்யாவுக்கு வலியுறுத்தும் வகையில் அவர்கள் அங்கு சென்றுள்ளனர்.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பினால் இந்த திட்டம் முன்மொழியப்பட்டிருந்தது.

அவர்களுடன் போலந்து நாட்டுப் பிரதமரும் உக்ரைனுக்கு சென்றுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி மற்றும் போலந்து உள்ளிட்ட நாடுகள் 30 நாள்கள் போர்நிறுத்தத்துக்கான அமெரிக்காவின் முன்மொழிவுக்கு ரஷ்யா உடன்பட வேண்டும் என வலியுறுத்துகின்றன.

இதேவேளை, கியவ்வில் உள்ள அமெரிக்கத் தூதரகம் எதிர்வரும் நாள்களில் குறிப்பிடத்தக்க வான்வழித்தாக்குதல்களின் அபாயம் குறித்தும் எச்சரித்துள்ளது.

# காசாவிற்கு உதவிகளை வழங்க அமெரிக்கா புதிய திட்டம்





காசா பகுதிக்கு மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக அமெரிக்கா புதிய திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

காசாவிற்கான மனிதாபிமான உதவிகளை இஸ்ரேல் தடுத்துள்ளமையினால், ஐக்கிய நாடுகள் சபையின் அறிவுறுத்தல்களை மீறி, தனியார் நிறுவனங்கள் மூலம் மனிதாபிமான உதவிகளை வழங்க அமெரிக்கா திட்டமிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், காசா பகுதிக்கான மனிதாபிமான உதவிகளை இஸ்ரேல் தடுத்துள்ளமையினால், காசாவில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ளவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.




# உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகளால் தமிழ்க் கட்சிகளின் திரிசங்கு நிலை...!



வி.எஸ்.சிவகரன்

ஜனநாயகம் என்பது கும்பலின் ஆட்சி எனும் லெனின் கூற்றை மெய்ப்பிப்பதாகவே ஒவ்வொரு தேர்தலும் காணப்படுகின்றது.

நடந்து முடிந்த ஊராட்சித் தேர்தலும் அதற்கு விதிவிலக்கு அல்ல. தேர்தல் அரசியலிலே எவரும் உத்தமர் அல்லர். எந்தக் கட்சியும், எந்த தனி நபர்களும் யோக்கியவான்களும் அல்லர்.

அதனால் தான் அரசியல் என்பது அயோக்கியனின் கடைசி புகலிடம் என்றார் மாக்கியவல்லி.

எண்ணிக்கைதான் ஜனநாயகம் என்பதே எழுதப்பட்ட விதியாக இருக்கின்றது. அந்த எண்ணிக்கையை எப்படியும் எட்டிப் பெருக்கி விடலாம் என்பது தான் அரசியல் கட்சிகளின் வேட்பாளர்களின் கணக்காக இருக்கிறது. எல்லா பிற்போக்குத்தனங்களிலும் ஈடுபட்டு வாக்கை தனதாக்கிக் கொள்கின்ற விடயத்தில் எந்த அரசியல் அறத்தையும் எவரும் பின்பற்றுவதில்லை.

தூய அரசியல் பற்றி சிந்திப்பவர்களால் தேர்தல் அரசியலில் ஒருபோதும் வெற்றி பெற முடியாது. தற்போதைய உலகளாவிய நிலைப்பாட்டின்படி பொருளாதார பலம் உள்ளவர்கள் மாத்திரமே அரசியலில் செல்வாக்குச் செலுத்த முடியும்.

அரசியல் என்பது ஒரு வணிக முதலீடாகவே மூன்றாம் மண்டல நாடுகளில் முதலிடப்படுகிறது.

அது தற்போத ஐக்கிய அமெரிக்க ஜனாதிபதியின் இரண்டாவது வருகையிலும் மூன்றாம் மண்டல நாடுகளின் அரசியல் போல் அமெரிக்காவிலும் நிகழ்த்தப்பட்டது.

பிற்போக்குத்தனமான செயற்பாடுகள் அத்தனையிலும் எம்மவர்கள் வெள்ளையர்களுக்கும் பாடம் கற்பிப்பவர்களாகவே காணப்படுகிறார்கள்.

இந்த வாக்கு வணிக அரசியலாலும் பொருளாதார நலன்களை முதலீடு செய்து வாக்குப் பெறும் கலாசாரத்தினாலும் நல்ல தலைவர்கள் உலகம் முழுவதும் உருவாகவில்லை.

அதிலும் நேர்மையான வகையில் பொருளாதாரத்தை ஈட்டி கொண்டவர்கள் அரசியல் அரங்கத்தை அலங்கரித்தமை மிகவும் குறைவு தவறான வழியில் பொருளாதாரத்தை ஈட்டி கொண்டவர்களே தங்கள் செல்வாக்கை மேலும் நிலை நிறுத்திக் கொள்வதற்காக தவறாக சேர்த்த சொத்துக்கு அரசியலே பாதுகாப்பான இடம் என தேர்ந்தெடுக்கிறார்கள்.

வாக்கு பெறும் நோக்கில் இருக்கின்ற அரசியல் கட்சிகள் எந்தக் கொள்கையும் இன்றி இவ்விதமான பிற்போக்குவாதிகளையும் அரவணைத்துக் கொள்கின்றன.

இந்த உள்ளூராட்சி தேர்தலில் சில வட்டாரங்களில் 30 தொடக்கம் 50 லட்சம் வரைக்கும் அதற்கு மேலும் செலவழித்தவர்களும் உண்டு ஒரு வாக்குக்கு ரூ.2000 தொடக்கம் ரூ.5000 வரை வழங்கியவர்களும் உண்டு.தினமும் மதுபானம்,உலர் உணவு வழங்கியவர்களும் உண்டு.

அரசியல் அறம் பேசக்கூடியவர்கள் தவறான பண முதலீட்டாளர்களுக்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியாமல் தோல்வியடைந்துள்ளனர். அரசியல் அரங்கை விட்டு அகன்றும் உள்ளனர். யோக்கியர்களும், உத்தமர்களும், நீதியையும் அறத்தையும் சத்தியத்தையும் நேர்மையையும் சமநீதியையும் சுயமரியாதையையும் விரும்பக் கூடியவர்களும் தேர்தல் அரசியலை கனவில் கூட நினைத்துப் பார்க்க முடியாது.

இது விடயத்தில் இந்தியாவை விரைவில் விஞ்சி விடுவோமோ என எண்ணத் தோன்றுகிறது.

கொள்கை கோட்பாட்டிற்கு அமைய தமிழ் தேசிய சித்தாந்தத்தை ஏற்றுக்கொண்டுதான் வாக்குப் போட்டார்கள் என உதட்டளவில் தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் உளறுவதைப் பார்க்கின்ற போது வேடிக்கையாக இருக்கின்றது.

எந்த ஒரு கட்சியும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு தேர்தல் விஞ்ஞாபனம் வெளியிட்டதாக இல்லை. இந்தத் தேர்தலிலே சாதி, சமயம், பணம், மதுபானம், குடும்ப உறவுகள் இவைதான் செல்வாக்குச் செலுத்தின. வேறு எந்தக் கொள்கையும் எவருக்கும் செல்வாக்கு செலுத்தவில்லை.

நான்கு தொடக்கம் ஆறு முனைப் போட்டி சில இடங்களில் இடம்பெற்றதனால் சில கட்சிகள் அதில் அதிக வாக்கை பெற்றுள்ளன. 2016 ஆம் ஆண்டு தமிழக சட்டசபை தேர்தலிலே மும்முனை போட்டியிலே ஜெயலலிதா வெற்றி பெற்றமை போல் பலமுனை போட்டியிலே தமிழரசுக் கட்சி சில பல இடங்களில்



# உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகளால் தமிழ்க் கட்சிகளின் திரிசங்கு நிலை…!

தப்பிப் பிழைத்து விட்டது.

ஆறு மாதத்துக்குள் மாற்றம் ஏற்பட்டு விட்டது என தலைவர்கள் தங்களுக்குள் புளகாங்கிதம் அடைந்து கொள்கிறார்கள்.

இந்த வாக்குகள் கொள்கைக்காக வந்தவையா, தனி மனிதர்களுக்கு – தனி மனிதர்களுடைய தனிப்பட்ட நலன் சார்ந்து – அளிக்கப்பட்டவையா என்பதனை ஒவ்வொரு கட்சியும் மீளாய்வு செய்து கொள்வது அவசியம்.

பொது எதிரிக்கு எதிராக அணி திரளுங்கள் எனப் பலராலும் விடுக்கப்பட்ட வேண்டுகைக்கு அமைய தேசமாக திரள்வோம் என திரண்டு இருக்கிறார்கள் என சிலர் கூறுவது வேடிக்கையாக இருக்கிறது. கடந்த 2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தலிலே வன்னியிலும் கிழக்கிலும் மிகக் கணிசமான ஆசனங்களையும் வாக்கையும் உதயசூரியன் சின்னம் பெற்றிருந்தது. அடுத்த தேர்தலில் அப்படியாயின் அந்த வாக்கு அந்த கட்சிக்கு கிடைத்திருக்க வேண்டும்.

ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் மாகாணசபைதேர்தல், உள்ளூராட்சிதேர்தல், கூட்டுறவுச் சங்கங்களுக்கான தேர்தல், இதர உள்ளூர் அமைப்புகள் மற்றும் சங்கங்களுக்கான தேர்தல் ஆகியவற்றில் ஒவ்வொன்றையும் ஒவ்வொரு விதமாகவே வாக்காளனும் அங்கத்தவர்களும் நோக்குவார்கள். இதை ஒரே கோட்பாட்டை, ஒரே சித்தாந்தத்தை வைத்து, நிறுவி விட முடியாத அரசியல் கணக்கு என்பதனை புரிந்து கொள்ள முடியாத அரசியல் கட்சித் தலைவர்கள் தங்களுக்கு மக்கள் ஆணை கிடைத்து இருக்கிறது என அறியாமையில் ஓலமிடுவது வேடிக்கையாக இருக்கிறது.

ஒவ்வொரு கட்சியும் தங்களுக்கு எதிராக அளிக்கப்பட்டுள்ள வாக்குகளின் எண்ணிக்கை என்ன என்பதனை உணர்ந்து கொள்ள வேண்டும். அது ஏன் அளிக்கப்படவில்லை எதற்காக அளிக்கப்படவில்லை, அந்த சூழல் ஏற்பட்டதற்குரிய காரணம் என்ன என்பதனை எல்லாம் ஆய்வு செய்து, அந்தத் தவறுகளில் இருந்து அரசியல் கட்சிகள் மீளெழ முயற்சிக்க வேண்டும்.

அவ்வாறான ஒன்றை எந்தத் தமிழ் கட்சியும் செய்வதில்லை. தேர்தல் காலத்தில் தமிழ்த் தேசியக் கோட்பாட்டை மக்கள் மத்தியில் விதைத்து, வாக்கை மூலதனம் ஆக்குவது ஒன்றைத் தவிர, தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகள் எதனையும் இந்த மக்களினுடைய விசுவாசகர்களாக நடந்து கொள்வதில்லை.

வன்னியிலே ஆளுங்கட்சி கணிசமான இடங்களைக் கைப்பற்றி இருக்கிறது. அதிலும் குறிப்பாக வவுனியாவில் தமிழரசு கட்சி மிக மோசமான பலவீனம் அடைந்திருக்கிறது.

தமிழ்க் கட்சிகள் தங்களுக்குள் போட்டித் தவிர்ப்பை மேற்கொள்ளுங்கள் எனப் பலராலும் வலியுறுத்தப்பட்டது. அது செவிடன் காது சங்காக இருந்ததன் காரணத்தினால்தான் பல வட்டாரங்களை இழக்க நேரிட்டது. மீண்டும் பதவியை தமக்குள் பகிர்ந்து கொள்வதற்காக கூட்டணி சேர முற்படுகிறார்கள். எந்தக் கொள்கையில், எந்தப் புள்ளியில் இவர்கள் இணையப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இந்தியாவின் அடிமை என்றும், அரசியல் விபச்சாரி என்றும், மலர் மாளிகைக் கொலைக் குற்றவாளி என்றும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியில் உள்ளவர்களை மிகக் கேவலமாக விமர்சித்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இன்று அவர்களோடு கூட்டு வைக்க முற்படுகிறார்.

சந்திரகுமார் இந்த கூட்டில் இணைந்து விட்டார் என – கொள்கை காணாமல் போய்விட்டது என – அதிலிருந்து விலகி கஜேந்திரகுமாரோடு அணி சேர்ந்தது சிவாஜிலிங்கம் – ஸ்ரீகாந்தா இணை. ஆனால் அந்தக் கொள்கை இல்லாத கூட்டோடுதான் கூட்டு வைக்கிறாராம் கஜேந்திரகுமார் பொன்னம்பலம். அப்படியானால் கஜேந்திரகுமாரின் கொள்கை என்ன ? சந்திரகுமாரையும் ஏற்றுக் கொள்கிறாரா இவர்? கடந்த காலத்தில் இந்த ஜனநாயக கூட்டணியில் மூன்று தலைவர்களையும் பற்றி வைத்த குற்றச்சாட்டு இப்பொழுது இல்லாமல் போய்விட்டதா? தன்னை “க.குமார்” (அதன் விரிவாக்கம் – கள்ளன் குமார்) என விமர்சித்த பத்திரிகையின் முதலாளியும் கூட்டில் வைத்திருக்கிறார். ஆனால் தமிழரசுக் கட்சியோடு தான் கூட்டு சேர முடியாது என கஜேந்திரகுமார் சொல்கிறார். யார் கொள்கைவாதி, யார் இலட்சியவாதி என்பது கஜேந்திரகுமாருக்கு மட்டுமே வெளிச்சம். குடும்பக் கட்சியை வளர்ப்பதற்கும், “துரோகி” பட்டம் வழங்குவதற்கும் ஒரு கட்சி இருக்கிறது அவரிடம்.





# உள்ளூராட்சி தேர்தலின் முடிவுகளால் தமிழ்க் கட்சிகளின் திரிசங்கு நிலை...!

அந்தக் கட்சியிலே தமிழரசுக் கட்சியிலிருந்து விரட்டப்பட்டவர்களும், அரசியல் முகவரி இல்லாத அரசியல் அநாதைகளும், போக்கு இடம் அற்ற சிலரும் போய் ஒட்டிக் கொண்டனர்.

அவர்களால் இந்த உள்ளூராட்சி தேர்தலிலே பெரிய செல்வாக்கு செலுத்த முடியவில்லை. கடந்த உள்ளூராட்சி தேர்தலில் தனித்து நின்று பெற்றுக் கொண்ட ஆசனத்தைக் கூட இம்முறை இந்த செல்வாக்கற்றவர்களை மேடையில் ஏற்றியதாலும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

அந்த விரக்தியில்தான் கஜேந்திரகுமார் எந்தக் கொள்கையும் இல்லாத சங்கோடு கூட்டு வைக்க முயற்சிக்கிறார். அப்படியானால் கஜேந்திரகுமாரும் கொள்கையற்றவர் என்பதுதானே ஒரு சாமானிய அரசியல் பார்வையாளராக கருத வேண்டி உள்ளது.

தமிழ்த் தேசியம் உதட்டளவில் பேசும் கட்சிகள், அரசாங்கம் வடக்கு, கிழக்கின் ஒவ்வொரு மாவட்டத்திலும் எத்தனை வாக்கு பெற்று இருக்கிறது என்கின்ற அரசியல் கணக்கை ஒருபோதும் பார்ப்பதில்லை. கூட்டுத் தொகையை மட்டும் வைத்து தாங்கள் வெற்றி பெற்று விட்டோம் என தம்பட்டம் அடிக்கிறார்கள். இந்த வாக்குகள் முற்றிலும் நிலையற்றவை.

நேற்றைய தினம் ஊடக சந்திப்பு நடத்திய கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தினதும், சுரேஷ் பிரேமச்சந்திரனினதும் கூற்றுகள் மீண்டும் ஐக்கியப்பட்டாலும் முரண்பாடுகளின் மொத்த வடிவமாகத்தான் அந்த கூட்டு காணப்பட போகிறது. பதவிகளைப் பகிர்ந்து கொள்வதற்காக இவர்கள் ஐக்கியப்படுவது என்பது ஜனநாயக அரசியலுக்கு சரியாக இருக்கலாம். ஆனால் இந்த காலாவதியான அரசியல்வாதிகளுக்கு புத்துயிர் அளிப்பது என்பது எந்த வகையிலும் பயனற்றது. மீண்டும் தோல்வி அடைந்தவர்கள் மாகாண சபைக் களத்துக்கு வருவார்கள். மக்கள் மத்தியிலே வெறுப்பு ஏற்படும். அதனால் அரச கட்சிக்கு வாக்களிக்கும் துர்ப்பாக்கிய நிலை ஏற்படும். அரசியலில் இருந்து கடந்த காலத்தில் பதவியை அனுபவித்து சுவைத்தவர்கள், சிற்றின்பம் அல்ல, பேரின்பத்தை அடைந்தவர்கள், தற்போது பதவி இல்லை என்றதும் அவர்கள் படும்பாடு வார்த்தைகளால் வர்ணிக்க முடியாதவை. ஜனநாயகத்தின் பெயரிலான அதிகாரம் இவ்வளவு பிற்போக்குத்தனமானதா என்கின்ற கேள்வியும் எழுகின்றது.

விமர்சனங்களுக்கு அப்பால் கிளிநொச்சியில் ஸ்ரீதரன் இரண்டு சபைகளை அறுதிப் பெரும்பான்மையோடு தக்க வைத்துக் கொண்டார்.

திருகோணமலையில் வெருகல் பிரதேச சபையையும் தமிழரசுக் கட்சி தக்க வைத்துக் கொண்டது. மக்கள் மத்தியிலே பொது நம்பிக்கையை கட்டி எழுப்பக்கூடிய விசுவாசத்தையும் அரசியல் அறத்தையும் விதைக்காமல் விளைவை ஒருபோதும் எதிர்பார்க்க முடியாது.

மீண்டும் இவர்கள் கூட்டணி அமைக்க முற்படுவது என்பது முழுக்க முழுக்க பதவிக்கானது. எதிர்கால தேர்தல்களிலும் கூட்டாகவே தேர்தல்களை சந்திப்பார்கள். நிராகரிக்கப்பட்ட எல்லோரும் தங்கள் மீள் அரசியல் பிரவேசத்திற்காக இந்த கூட்டை உபயோகப்படுத்துவார்கள். பதவியை அனுபவித்தவர்களுக்குத்தான் அதன் சுகம் புரியும்.

இந்தத் தேர்தல் முறைமையில் உள்ள குறைபாடே ஒரு கட்சி ஆட்சி அமைப்பதில் குழப்பம் நிலவுகின்றது. மன்னார், வவுனியா போன்ற இடங்களிலேயே அரசாங்கத்தின் வாக்கு வங்கி இரட்டிப்பாக அதிகரித்து இருக்கிறது. இதனை மாற்றக்கூடிய வகையில் எந்த விதமான நிலைப்பாட்டையும் இங்கு இருக்கின்ற கட்சிகள் மேற்கொண்டதாகத் தெரியவில்லை.

சபை அமைக்கும்போதும் கூட கட்சிகளுக்கு இடையேயான இணக்கம்எல்லா இடங்களிலும் பிரதிபலிக்கக் கூடிய நிலை ஏற்படாது.

பதவிகளுக்காகப் பலர் மாறுபட்டு வாக்களிக்க கூடிய நிலைமை உருவாகும். மாகாண சபை தேர்தல் வந்தாலும் கூட இதே திரிசங்கு நிலைதான் ஏற்படலாம். தமிழ்க் கட்சிகள் ஆட்சி அமைப்பதற்கு ஐக்கியப் பட்டாலும் கூட அவை எதிர்காலத்தில் கூட்டாக ஒன்றாக ஒரு தலைமையின் கீழ் இயங்கக்கூடிய வாய்ப்பு மிகவும் குறைவாகவே காணப்படுகின்றன. அங்கு இருக்கின்றவர்கள் எல்லோரும் தலைவர்கள். சம்பந்தன் காலத்திலேயே முரண்பட்ட கூட்டமைப்பு,இப்பொழுது இந்தப் பெரியண்ணன் பாத்திரத்தை வகிப்பது யார்? அவ்வாறு வகித்தாலும் அதனை எவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய நிலையில் இல்லை.ஆகவே தமிழ்க் கட்சிகள் தங்களுக்கு விழுந்த வாக்கையும் தங்களுக்கு எதிராக விழுந்த வாக்கையும் ஒன்றாகக் கூட்டி அடுத்த கட்ட அரசியல் கணக்கை எவ்வாறு தொடங்கப் போகிறீர்கள் என்பதனை வரையறுத்துக் கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். தனிமனிதர்களாக வெற்றி பெற்ற உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வைத்து மக்கள் ஆணை கிடைத்துவிட்டது என சந்தர்ப்பவாத அரசியல் பேசினால் அடுத்த தேர்தலில் இந்த வாக்கும் இல்லாமல் போய்விடும். இந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு வெற்றி அல்ல. இந்தத் தேர்தலில் இருந்து கற்றுக்கொள்ள வேண்டிய பாடம் அதிகம். அரசியல் கணக்குகள் எப்பொழுதும் கூட்டல், பெருக்கல் மாத்திரமல்ல. கழித்தலும் உண்டு என்பதனை உணர்ந்து கொள்ளாத தமிழ் தலைமைகள் உள்ளவரை தமிழ் மக்களுக்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.



# தாயின் தன்னலமற்ற அர்ப்பணிப்பே சமூக முன்னேற்றத்தின் அடித்தளம்

## இன்று அன்னையர் தினம்

எருவில் கீரன் ஜேடி
(சமூகவியலாளர்)

“தாயின் மடியில்தான் முதல் முறையாக மனிதம் பூக்கிறது” என்ற பழமொழி அழியா உண்மையைச் கற்றுக்கொடுக்கிறது. தாய் என்பது வெறும் பாசத்தின் பெயர் அல்ல. அது உயிர் முழுக்க ஆளும் சக்தி. மனிதர்களின் மனம், மொழி, மரபு, வாழ்வியலைப் புகட்டும் முதல் ஆசான் தாய்தான். தாயின் பாசமும், பொறுமையும், அர்ப்பணிப்பும் இல்லாமல் ஓர் இனத்தின் வளர்ச்சியும், ஒரு சமூகத்தின் முன்னேற்றமும் சாத்தியமில்லை.

தாயின் அர்ப்பணிப்பு என்பது பூமி மீது நடக்கும் மிகப் பெரிய அதிசயம். அந்த அர்ப்பணிப்பு சொற்களில் சிக்காத உணர்வாக இருக்கிறது. ஒருவரின் வாழ்நாளில் மனதில் நிறைந்து நிலைக்கும் முகம் தாயின் முகம் தான். அவளின் பாசமும் பொறுமையும் ஒவ்வொரு தலைமுறையையும் வளர்க்கும் வேராக மாறுகிறது. அந்த வேர்கள்தான் குடும்பத்தை நிழலளிக்கச் செய்யும் மரமாகவும், சமூகத்தை மக்களால் நிரம்பிய புதுமைத் தோட்டமாகவும் மாற்றுகின்றன.

தாய் குழந்தையின் முதல் ஆசிரியர். அவள் பேச்சில் கல்வி இருக்கிறது. அவள் சிரிப்பில் பாதுகாப்பு இருக்கிறது. அவள் விழிகளிலே எதிர்காலத்தின் கனவுகள் பதிந்திருக்கின்றன. தாயின் அரவணைப்பில் ஒவ்வொரு குழந்தைக்கும் ஓர் உணர்வுப் பாதுகாப்பு ஏற்படுகிறது. குழந்தையின் மொழி வளர்ச்சி, உணர்வியல் வளர்ச்சி, நேர்மையுடனான நிலைமை ஆகியவை அனைத்தும் தாயின் பாசத்தால் கட்டமைக்கப்படுகின்றன.

இன்றைய ஆளுமை மிக்க தலைவர்களும், கலைஞர்களும், விஞ்ஞானிகளும், சமூக சேவையாளர்களும் – அவர்கள் பெற்ற ஆழ்ந்த அடிப்படை மதிப்புகளும், ஒழுக்கமும், நெஞ்சார்ந்த கனிவும் – தாயின் சொற்களாலும் செயல்களாலும் உருவானவை. ஒரு குடும்பத்தின் கட்டுப்பாடும் ஒழுக்கமும் ஒரு சமூகத்தின் தரத்தைக் காட்டுகின்றன. அந்த கட்டுப்பாட்டை அமைக்கக்கூடிய முதன்மை நபர் தாய்தான். குழந்தையின் மனதுக்குள் நீங்காத முத்திரையை பதிக்கும் அந்த முதற் பாதம் தாயின் வழிகாட்டுதலாகும்.

தாயின் சிந்தனைகள், அவள் எடுத்த முடிவுகள், அவளின் எல்லையில்லா பாச செயல்கள் – இவை அனைத்தும் குடும்ப உறுப்பினர்களை ஆளாக மாற்றுகின்றன. ஒரு நல்ல குடும்பம் ஒரு நல்ல சமுதாயத்திற்கு அடித்தளமாக அமைகிறது. இவ்வளவாக ஒரு சமூக மாற்றத்தை நிகழ்த்துவதில் முக்கியமான பங்கு வகிக்கிறவர் தாயே.

தாய் என்பவள் குடும்பத்தில் ஒரு வேளையும் ஓய்வு எடுத்ததில்லை. வேலை நேரம் என்ற வார்த்தையே இல்லாத சடங்கு அவளின் வாழ்க்கை. இரவு தூங்காமலும், இரவில் தூங்கிக்கொண்டிருக்கும் குழந்தையை கைவிரலால் தொட்டு பார்த்து நிம்மதிபடுவாள். அவளது பாசம் ஒரு கடல் போல் ஒருபோதும் வற்றாதது.

நாம் பெருமைப்படும் ஒவ்வொரு சமூகத்திலும் – கல்வி, ஒழுக்கம், கலாசாரம், ஒற்றுமை ஆகியவையும் ஒரு பொதுவான மூலத்தொட்டியிலிருந்து உருவாகின்றன. அது தாயின் மடியே. ஒரு தாய் தனது குழந்தைகளை நீதிமயமான, பொறுப்புணர்வு கொண்டவர்களாக வளர்க்கும்போது, அது நேரடியாக சமூக ஒழுங்கையும் தரம் உயர்த்தும்.

புதிய தலைமுறைக்கு நல்ல பயிற்சி, பண்பாட்டு விழிப்பு, மனிதநேயம், சமத்துவம் போன்றவற்றை விதைக்கும் விதை, தாயின் வார்த்தைகளிலும் செய்கைகளிலும்தான் உள்ளது. ஒருவரை உயர்ந்த மனிதராக மாற்றுவதற்கான முதல் பாடம் தாயிடமிருந்து தான் கிடைக்கிறது.

தாயின் அந்த தன்னலமற்ற பாசமே சமூக ஒற்றுமைக்கும், மனிதநேயம் நிறைந்த தலைமுறைக்கும் வழி வகுப்பதாகும். அந்த பாசம் இல்லையென்றால், ஒரு சமூகமும் மனிதத்தோடு நிலைத்திருக்க முடியாது. அந்த உணர்வே சமூக முன்னேற்றத்தின் ஆழ்ந்த அடித்தளம்.

தாயின் வரலாறு என்பது சாதனைகளில் பதியப்படாத பெருமை. அந்த பெருமை ஒவ்வொரு வார்த்தையிலும் உயிர் பெற வேண்டும். தாயை எண்ணும் போது மட்டும் அல்ல. தாயின் அர்த்தத்தை நம் செயலில் பிரதிபலிக்கும்போதுதான் நமது சமுதாயம் உண்மையான முன்னேற்றத்தை நோக்கிச் செல்கிறது. ஒரு நல்ல சமுதாயம் உருவாகவேண்டும் என்றால், அதற்கான

தொடர்ச்சி ▼

# தாயின் தன்னலமற்ற அர்ப்பணிப்பே சமூக முன்னேற்றத்தின் அடித்தளம்




தொடர்ச்சி▲

முதல் படி, ஒரு நல்ல தாயின் கையில் தான். குழந்தைகள் மதிப்புணர்வும், மரியாதையும், ஒழுக்கநெறியும் கொண்டு வளரவேண்டும் என்றால், தாயின் பாசமே அவர்களுக்குத் தூரிகையாக இருக்கவேண்டும்.

சமூக வளர்ச்சி என்பது ஒருசில கட்டடங்களோ, சாலை வளர்ச்சிகளோ அல்ல. அது மனநிலைகள், உறவுகள், ஒழுக்கநெறிகள், கல்வி, பண்பு ஆகியவற்றின் மேம்பாட்டைக் குறிக்கும். அந்த மாற்றத்தின் விதையை நம் மனதில் நடப்பவள் தாய்தான். ஒரு நல்ல தலைமுறை உருவாகுவதற்கு அவள் பணி முக்கியமானது. ஒழுக்கமிக்க, மனிதநேயம் நிரம்பிய, கல்வி விழிப்புணர்வுள்ள பிள்ளைகளை உருவாக்குவதுதான் சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படை.

தாயின் அர்ப்பணிப்பு எப்போதும் மேடைகளிலும் பாராட்டப்படுவதில்லை. ஆனால் ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு வீட்டிலும் நடக்கும் அந்த மௌன சேவை தான் இந்த சமுதாயத்துக்கு அடித்தளமாக இருக்கிறது. அதனால்தான், தாயின் பாசம், தன்னலம் காணாத சேவை, மற்றும் நெஞ்சை உருக்கும் அர்ப்பணிப்பை உலக நாகரீகம் ஒவ்வொன்றும் தூய பரம்பரையாகக் கொண்டாடி வருகின்றன.

இவ்வுலகில் எத்தனை திறமைகள் வளர்ந்தாலும், ஒரு தாயின் அர்ப்பணிப்பு இல்லாமல் சமூக முன்னேற்றம் சாத்தியமில்லை. அவளது பாசம் மட்டுமே மனித குலத்தின் உண்மையான சக்தியாகத் திகழ்கிறது. தாயின் அர்ப்பணிப்பை மதிக்க தெரிந்த சமுதாயம் தான் உண்மையிலேயே முன்னேறுகிறது. இன்று நாம் அன்னையர் தினத்தைக் கொண்டாடும் போது, விழாக்களின் வேடிக்கை மட்டும் அல்ல. வாழ்வின் முக்கிய ஆளுமையாகத் தாயை மதிக்கவும், அவளது பணி தொடர்வதற்குத் தேவையான ஆதரவை வழங்கவும் நாம் உறுதி செய்யவேண்டும். அன்னையர் தினம் என்பது ஒரு நாள் மட்டுமே நினைவுகூர வேண்டிய நிகழ்வாக அல்ல. அது ஒவ்வொரு நாளும் நம்மை உருவாக்கிய தாயின் பாசத்தை நெஞ்சில் பதிக்க வேண்டிய விழிப்புணர்வு நாள். நாம் வாழும் ஒவ்வொரு சாதனையின் பின்னாலும் நம் தாயின் மூச்சுக்காற்று இருக்கிறது. தாயின் பாசத்திற்கு நன்றி சொல்ல ஒரு நாள் போதாது. ஆனால் அந்த ஒரு நாளாவது நம்மை உருவாக்கிய அவளது முயற்சியை நம்முடைய வார்த்தையாலும், செயல்களாலும் கௌரவிக்கலாம். இன்று நாம் எல்லோரும் மனமார கூறுவோம்.



# செப்புக் கம்பி, தொலைபேசிக் கேபிள்களுடன் மன்னார் ஜிம்ரோ நகர் பகுதியில் 2 பேர் கைது!

( வாஸ் கூஞ்ஞ)

நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் பொலிஸ் நிலையத்தில் அளிக்கப்பட்ட முறைப்பாட்டை அடுத்து மன்னார் பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையில் மன்னார் ஜிம்ரோ நகர்ப் பகுதியில் சுமார் இரண்டு லட்சம் ரூபா பெறுமதியான 17 கிலோ 200 கிராம் செப்புக் கம்பி மற்றும் தொலைபேசி கேபிள்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது தொடர்பாக 19 வயதுடைய இரு சந்தேக நபர்களை மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்துள்ளனர்.

இது தொடர்பாக சட்ட நடவடிக்கையை மேற்கொள்ளும் முகமாக சந்தேக நபர்கள் பொலிஸாரின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.05.2025




இன்று வளர்ச்சி காணப்படும் நாள். உங்கள் சுய முயற்சி மூலம் கடினமாக உழைத்து வெற்றி பெறுவீர்கள்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். சூழ்நிலையை திறமையாக கையாண்டு சவால்களை சமாளிக்க வேண்டும். சக பணியாளர்களின் ஆதரவு கிடைக்காது.

உங்கள் துணையுடன் நல்லுறவு கொண்டு மகிழ்வீர்கள். உங்கள் அணுகுமுறை உங்கள் பிரியமானவரின் பாராட்டைப் பெறும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக காணப்படுகின்றது. நீங்கள் கணிசமாக சேமிப்பீர்கள்.

கால் வலி மற்றும் தொடை வலி தவிர வேறு எந்த ஆரோக்கியப் பிரச்சினையும் இருக்காது. என்றாலும் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்துங்கள்.




இன்று விவேகத்துடன் யோசித்து செயல்பட வேண்டும். கடந்த காலத்தைப் பற்றிய யோசனையைத் தவிர்க்க வேண்டும். சாதகமற்ற சூழ்நிலையையும் சமாளித்து அதனை உங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொள்ளுங்கள்.

நீங்கள் பணியில் தவறுகள் செய்ய நேரலாம். எனவே திட்டமிட்டு பணியாற்றுங்கள். அதிகரிக்கும் பணிச்சுமை காரணமாக வேறு வேலை தேடுவீர்கள்.

இன்று நீங்கள் காதலை எளிதாக எடுத்துக்கொள்வீர்கள். இதனால் உங்கள் துணையுடன் சுமுகமான உறவு காணப்படும்.

நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இருக்காது. கூடுதல் செலவினங்களை சந்திக்க நேரலாம்.

இன்று ஆரோக்கியம் சாதரணமாக இருக்கும்.




இன்று உங்கள் திறமையை வெளிப்படுத்தி வெற்றி பெறுவீர்கள். சிறப்புடன் செயலாற்ற மனதில் தெளிவு தேவை.

உங்கள் சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பீர்கள். அவர்களிடமிருந்து தக்க சமயத்தில் ஆதரவு கிடைக்கப்பெறுவீர்கள். அதன் மூலம் வளர்ச்சி காண்பீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்கள் துணையுடன் அன்பான தருணங்களை கழிப்பதன் மூலம் மன நிறைவைக் காண்பீர்கள்.

இன்று நிதி விஷயங்களுக்கு சாதகமான நாள். உங்கள் சேமிப்பு உயர்வதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ள நாள்.

தொடைகளில் விறைப்புத் தன்மை ஏற்பட வாய்ப்புள்ளது. யோகா மேற்கொள்வதன் மூலம் பலன் கிடைக்கும்.




இன்று உங்கள் செயல்களில் மிகுந்த அக்கறை காட்ட மாட்டீர்கள். அதிர்ஷ்டத்தை நம்பாமல் சிறந்ததை செயலாற்ற முயலுங்கள்.

பணியில் திருப்திகரமான நிலை இருக்காது. உங்கள் சக பணியாளர்களுடன் சுமுகமான உறவு காணப்படாது. தேவையற்ற பேச்சுகளைத் தவிர்க்கவும்.

இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல. உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்ள முடியாவிட்டால் பொறுமை இழக்காதீர்கள். இனி வரும் நாட்கள் சிறந்த நாட்களாக இருக்கும் என்று நம்புங்கள்.

நிதி விஷயங்களுக்கு இன்று சிறந்த நாளாக இல்லாத காரணத்தால் உங்களிடம் உள்ள பணத்தை வைத்து சமாளிக்க வேண்டும்.




உங்கள் முடிவுகளை செயலாற்றுவதில் உறுதியாக இருப்பீர்கள், மனதில் உள்ள குழப்பத்தை நீக்கி விடுங்கள். உங்கள் முடிவுகளை, கவனமாக திட்டமிட்டு செயலாற்றுவது நன்மை தரும்.

உங்கள் பணிக்கான பாராட்டைப் பெறுவீர்கள். உங்கள் செயல்திறன் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று நம்பிக்கையுடனும் உற்சாகத்துடனும் இருக்க வேண்டும். உங்கள் துணையை மகிழ்விக்க முயற்சி செய்யுங்கள்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. இன்று அதிர்ஷ்டமான நிதிநிலைமை இருக்காது. அது உங்களுக்கு கவலையாக இருக்கும்.

மனதில் காணப்படும் உற்சாகம் காரணமாக ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று சிறப்பான நாள். உங்களின் மனநிலையை சிறப்பாக பராமரித்து தன்னம்பிக்கையுடன் காணப்படுவீர்கள்.

உங்கள் பணியில் வெற்றி கிடைக்கும். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உறவில் நல்லிணக்கம் காணப்படும். உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள்.

இன்று பண வரவு சீராக இருக்கும். பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியத்தில் எந்தப் பிரச்சினையும் காணப்படாது.




உங்களிடம் சிறந்த ஆற்றல் காணப்படும். அதற்கான நற்பெயர் பெறுவீர்கள். உங்கள் பணியில் மாறுதல்கள் நேரலாம்.

இன்று பணிகள் அதிகமாக இருக்கும். நீங்கள் பணியில் மும்மரமாக செயல்படுவீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் அங்கீகாரம் பெறுவீர்கள்.

இன்று காதலுக்கு உகந்த நாள். உங்களின் சிறந்த உணர்வுகளை உங்கள் துணையுடன் பகிர்ந்து கொள்வீர்கள்.

நிதி சம்பந்தமான பிரச்சினைகள் பாதிப்பை ஏற்படுத்தாது. நீங்கள் பணத்தை சேமிப்பீர்கள்.

ஆரோக்கியத்தில் சிறிது கவனம் தேவை. கால் வலியால் அவதிப்பட நேரும்.




இன்று சில அசௌகரியங்கள் காணப்படும். உங்கள் ஆக்கப்பூர்வமான செயல்பாட்டை பாதிக்கும் பதட்டத்தை கைவிடுங்கள்.

இலக்குகளை அடைவதற்கும் வெற்றியைப் பெறுவதற்கும் முறையாக திட்டமிடவேண்டியது அவசியம்.

திருமண திட்டங்கள் பற்றிய உரையாடல்களை வேறு ஒரு நாளைக்கு தள்ளிப்போடுங்கள். இன்று காதலுக்கு ஏற்ற நாள் அல்ல.

பணத்தை கவனமாக கையாள வேண்டும். பண இழப்பு அல்லது பணம் திருடு போகலாம்.

உங்கள் தாயின் உடல் நிலை பற்றி கவலைப்படுவீர்கள். அந்த வகையில் செலவுகள் ஏற்படலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 11.05.2025




இன்று சிறந்த நாளாக இருக்காது. அசௌகரியங்கள் காணப்படும். புதிய தொடர்புகளை ஏற்படுத்திக் கொள்ள இன்றைய நாளை பயன்படுத்திக் கொள் ளுங்கள்.

பணியில் பதவி உயர்வு கிடைக்க வாய்ப்பு உள்ளது. பணியில் உங்கள் நேர்மை பாராட்டைப் பெறும்.

உங்கள் துணையுடன் தேவையற்ற மோதல்கள் ஏற்படலாம். அவசர முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று நிதிநிலைமை மகிழ்ச்சிகரமானதாக இல்லை. தேவையற்ற செலவுகளை கண்காணிக்கவும்.

இன்று அஜீரணம் மற்றும் வயிற்று உப்பசம் போன்ற பாதிப்புகள் ஏற்படலாம். உண்ணும் உணவில் கவனம் கொள்ளுங்கள்.




விரக்தியான மன நிலையை தவிர்த்துவிட்டு மனதை மகிழ்ச்சியாக, அமைதியாக வைத்துக்கொள்ளுங்கள்.

பணியில் கூடுதல் சுமைகள் காணப் படும். பணியிடச் சூழல் மகிழ்ச்சியை அளிக்காது.

இன்று காதலுக்கு உகந்த நாள் அல்ல. உங் கள் துணையுடன் மோதல்கள் ஏற்பட வாய்ப்புள் ளது.

இன்று பண வளர்ச்சி குறைந்து காணப்படும். பணம் சேமிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மியை தவிர்த் திடுங்கள். அது உங்கள் ஆரோக்கியத்தைக் கெடுக் கும்.




இன்றைய நாள் ஏற்ற இறக்கங்களு டன் காணப்படும். திறம்பட அறிந்து உங்கள் செயல்களை ஆற்ற வேண்டும். தியானம் மேற்கொள்வது பயனுள்ள தாக இருக்கும்.

இன்று பணியில் வெற்றி காண பீர்கள். சிறந்த வாய்ப்புகள் கிடைக்கும்.அதனை சரி யாகப் பயன்படுத்துவதன் மூலம் பாராட்டைப் பெறுவீர் கள்.

உங்களுக்கும் உங்கள் துணைக்கும் இடையிலான உறவில் நல்ல பிணைப்பு காணப்படுகின்றது.

இன்று வரவும் செலவும் இனைந்து காணப்படும். கூடுதல் பொறுப்புகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

தேக ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படும்.




முன்னுரிமைப்படி செயல்களை செய்வதற்கு மனதில் தெளிவு கொள் ளுங்கள். விழிப்புணர்வுடன் செயல் களைச் செய்து வளர்ச்சி காண்பீர் கள்.

பணியில் புதிய வாய்ப்புகள் உற் சாகத்தை அளிக்கும். உங்கள் பணிகளை விரைந்து ஆற்றுவீர்கள்.

நெருங்கிய உறவினர் ஒருவரிடமிருந்து உங்களுக்கு பயனுள்ள ஆலோசனை கிடைக்கும். அது உங்கள் தாய் அல்லது தந்தையாகக் கூட இருக்கலாம். அதன் மூலம் உங்களுக்கு பலன் கிடைக்கும்.

நிதி விஷயங்கள் இன்று சிறப்பாக காணப்படும். உங்களால் சேமிக்க இயலும்.

இன்று ஆரோக்கியப் பிரச்சனை காணப்படாது.



# இன்சுலின் தட்டுப்பாடு நிவர்த்தி செய்யப்பட்டது

நாட்டில் நிலவிய இன்சுலின் தட்டுப்பாடு நிவர்த்திக்கப்பட்டுள்ள தாக சுகாதார அமைச்சு தெரிவித் தது.

நாட்டில் பயன்படுத்தப்படும் 2 வகையான இன்சுலிகளுக்கு தட்டுப் பாடு நிலவியதாக பிரதி அமைச் சர் ஹன்சக விஜயமுனி தெரிவித் தார்.

இந்த 2 வகை இன்சுலின் தொகை நாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் குறிப்பிட்டார்.

வைத்தியசாலைகளில் இன்சு லின் தட்டுப்பாடு ஏற்பட்டால் அவற்றை திறந்த சந்தையில் கொள்வனவு செய்வதற்கு அறிவுறுத்தல்கள் வழங் கப்பட்டுள்ளதாகவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

தற்போதுள்ள இன்சுலின் கையி ருப்பு எதிர்வரும் ஜூன் மாதம் வரை போதுமானது என அவர் தெரிவித் தார்.